விலை: 50.00
பக்கங்கள் : 24
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 001 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 04 புதன்கிழமை (20.12.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

**கல்யாண மாலை**
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

உங்கள் வலம்புரிக்கு இன்று அகவை 24

## வலம்புரி எதற்கும் அஞ்சாமல் நீதியை எடுத்துரைக்கும் நாளிதழ்

### 24ஆவது அகவை நிறைவில் கலாநிதி ஆறு.திருமுருகன் பெருமிதம்



(யாழ்ப்பாணம்)

எதற்கும் அஞ்சாமல் நீதியை எடுத்துரைக்கும் வலம்புரி பத்திரிகை மக்களின் மகத்தான ஆசியால் இன்று உன்னதமாக வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

இவ்வாறு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் வலம்புரியின் 24 ஆவது அகவை நிறைவையொட்டி வழங்கிய ஆசிச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் வழங்கிய ▷23

# யாழில் டெங்கு உச்ச நிலையில்



### யாழ்.மாவட்ட அரச அதிபர்

- நேற்று மட்டும் 111 டெங்கு தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர்.
- யாழில் நாளை முதல் முழுநேர டெங்கு ஒழிப்பு நடவடிக்கை.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சகல பாடசாலை வளாகங்கள், வைத்தியசாலை வளாகங்கள், அரச நிறுவனங்கள் அமைந்துள்ள வளவுகள், பல்கலைக் ▷23

கிளிநொச்சி ஆனந்தபுரத்தில்

## புகையிரத விபத்து; இளைஞன் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஆனந்தபுரம் பகுதியில் இடம் பெற்ற புகையிரத விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று மாலை 5 மணியளவில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த ▷02

யாழில் பிறந்து

## நான்கு நாட்களேயான ஆண் குழந்தை மரணம்

உடற்கூற்று மாதிரி கொழும்புக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பிறந்து நான்கு நாட்களேயான ஆண் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது. ஆவரங்கால் பகுதியைச் சேர்ந்த தம்பதிகளின் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது,

குறித்த குழந்தை கடந்த 14ஆம் திகதி ▷02

## சீரற்ற காலநிலையால் தத்தளிக்கும் வடக்கு



(நேற்று மாலை நிலைவரப்படி)

### சீரற்ற காலநிலை பலாலியிலிருந்து சென்னை திரும்பிய விமானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக சென்னையில் இருந்து யாழ்ப்பாணம் பலாலி சர்வதேச விமான நிலையத்திற்கு வருகை தந்த பயணிகள் விமானம் தரையிறங்காமல் மீண்டும் சென்னைக்கு திரும்பி ▷23

## யாழில் 3 நாட்களாக தேடுதல் நடவடிக்கை

### 70 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த 3 தினங்களாக பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையில் 70 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திய பொலிஸார், வைத்திய அறிக்கை கிடைக்கப் பெற்றதும், அவர்களை நீதிமன்றங்களில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் ▷24

DLB DEVELOPMENT LOTTERIES
ஜயோதா ஐயோதா Jayoda
இன்றைய ஜாக்பொட் பரிசு
ரூ. 21,009,980/-
(C-2194)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

தென்னாடு

# மார்கழிப் பெருவிழா 2023

திருவாசகத்தில் கற்போர்மனதைப் பெரிதும் கவர்வது,
இலக்கியச்சுவையா? பத்திச்சுவையா?

நடுவர்
செந்தமிழ்சொல்லருவி.ச.லலீசன்
(அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)



இலக்கியச்சுவையே!

பத்திச்சுவையே!



செல்வன்.ஜெயபாலன் தவேதன்
(மாணவன், யாழ். இந்துக்கல்லூரி)



செல்வன் குணராசா மிதுராஜ்
(மாணவன், யாழ். இந்துக்கல்லூரி)



செல்வி. அபிநயா றஜீபன்
(மாணவி, வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை)



செல்வி.கனிமொழி கணேசானந்தன்
(மாணவி, யா/ மகாஜனக் கல்லூரி)



செல்வன்.மகேந்திரன் திகழ்ஒளிபவன்
(மாணவன், யாழ்.இந்துக் கல்லூரி)



செல்வி. ஆதிரை பிரதீபன்
(மாணவி, யா/ மகாஜனக் கல்லூரி)

(C-7950)

2023.12.25 அன்று மார்கழிப் பெருவிழாவின் மாலை அரங்கில்
இலங்கைவேந்தன் கல்லூரியில் இடம்பெறும்


## நான்கு நாட்க...

யாழ்ப்பாணம் - திருநெல்வேலியில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் பிறந்துள்ளது. இந்நிலையில் தாயும் சேயும் கடந்த 16ஆம் திகதி வீடு சென்றனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மதியம் குழந்தையின் உடல் திடீரென குளிர்ந்ததுடன் கை, கால், உடலில் சிவப்பாக காணப்பட்டது.

இந்நிலையில் குழந்தை மீண்டும் திருநெல்வேலியில் உள்ள தனியார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டது. யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் குழந்தை பரிதாபமாக உயிரிழந்தது.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். குழந்தையின் மரணத்திற்கான காரணம் தெரியவராத நிலையில் உடற்கூற்று மாதிரிகள் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

## புகையிரத விப...

நடராசா பிறையழகன் (வயது - 23) என்பரே உயிரிழந்தவராவார்.

வவுனியாவில் இருந்து யாழ். நோக்கிப் பயணித்த யாழ். ராணி புகையிரதம் மோதி குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-7,316)


# மணிவிழா வாழ்த்துகள்



திரு. சந்தியாப்பிள்ளை வின்சென்ற் யேசுராஜா
சேவைக் காலம் :- 2002.06.25 - 2023.12.19

பணியினில் நேர்மையும்
பண்பினில் உயர்வும்
அயர்விலா உழைப்பும்
அன்பினில் நிறைவும்
செறிவுடன் கொண்ட
நெறியோன் யேசு அண்ணை
எல்லோர்க்கும் அண்ணனாய்
நல்லோனாய் தினமுவந்து
இணக்கமுடன் சேவையினை
இனிதெனவே செயலாற்றி
மணிவிழாக் காணுகின்ற
அண்ணனை வாழ்த்துகின்றோம்.

Best Wishes

அமைதியும் ஆரோக்கியமும் பெருகிட நீடு வாழ்க.

வாழ்த்துவோர் :-
அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்,
நலன்புரிச்சங்கம்
முல்லைத்தீவு மகாவித்தியாலயம் முல்லைத்தீவு

(18284)



உ
திருச்சிற்றம்பலம்

தென்னாடு

## தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட சைவ மாணவர் சபை நடாத்தும்

# மார்கழிப் பெருவிழா - 2023

திருமுறையே சைவநெறிக் கருவூலம் தென்தமிழின் தேன்பாகு ஆகும்
திருமுறையே கயிலையின் கண் சிவபெருமான் செவிமடுத்த செந்தமிழ் வேதம்
திருமுறையே நடராசன் கரம் வருந்த எழுதியருள் தெய்வ நூலாம்
திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய் மலர்ந்தருளும் சிறப்பிற்றாமால்

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட சைவ மாணவர் சபை நடாத்தும் மார்கழிப் பெருவிழா இம்முறை மார்கழித் திங்கள் 9 ஆம் நாள் (டிசெம்பர் 25) திங்கட்கிழமை, இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் (கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்) நடாத்த திருவருள் கூடியுள்ளது.

**மார்கழித் திங்கள் 9 ஆம் நாள் (டிசெம்பர் 25) திங்கட்கிழமை**

காலை 8 மணியளவில் யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை மங்களநாதர் திருக்கோயில் வழிபாட்டுடனும் மற்றும் திருமுறை. நால்வர் பல்லக்கில் திருவீதியுலாவிற்கு எழுந்தருளலுடன் அரங்கங்கள் ஆரம்பமாகும்.

**காலை அரங்கம் - தில்லைக்கூத்தன் திருவம்பலம்**

(காலை 8.45 மணி தொடக்கம் 12.30 மணிவரை)

- 8.45 மணி - திருவிளக்கேற்றலும் அம்பலவாணர் அருள்வழிபாடும்
- 9.00 மணி - தொடக்க உரை - சிவத்திரு. **குணரத்தினம் பார்த்தீபன்** (முதல்வர்-தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்)
- 9.10 மணி- அருளுரை-தவத்திரு.**வேலன் சுவாமிகள்** (முதல்வர்-சிவகுரு ஆதீனம்)
- 9.20 மணி- திருமுறை விண்ணப்பம்-சிவத்திரு.**பத்மநாதன் சிவமைந்தன்** குழுவினர்
- 9.45 மணி- தலைமை உரை -கலாநிதி **பொன்னுத்துரை சந்திரசேகரம்** (தலைவர் - சைவசித்தாந்தத் துறை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
- 10.00 மணி- வாழ்த்துரை - பேராசிரியர்.**சி.சிறிசற்குணராசா** (துணைவேந்தர்- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
- 10.15 மணி- சிறப்புரை - தலைப்பு - **"பெரியபுராணமும் திருவாசகமும்"** வழங்குபவர் - **சிவ.பவானி அ.தியாகராசன் ஐயா** (அரன்பணி அறக்கட்டளை)
- 12.15 மணி-கௌரவிப்பு நிகழ்வு - கொடையாளர்களைச் சிறப்புச் செய்யும் நிகழ்வு

**அடியார் தமக்கு அமுது செய்விக்கும் நிகழ்வு - 12.30 முதல் 1.30 மணி வரை**

**மாலை அரங்கம் - சேக்கிழார் அரங்கம்**

**(1.30 மணி முதல் 4.30 மணிவரை)**

- 1.30 மணி -தலைமை உரை - சிவத்திரு **நல்லையா விஜயசுந்தரம்** (தலைமை ஆசிரியர் - வலம்புரிப் பத்திரிகை)
- 1.45 மணி - சிவதாண்டவம் (யா/குப்பிழான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்)
- 2.00 மணி- சிறப்புரை - தலைப்பு - **"நானோ இதற்கு நாயகமே"** வழங்குபவர் - சிவத்திரு.**ச.விநாயகமூர்த்தி ஐயா** (ஓய்வுநிலை போதனா ஆசிரியர்)
- 3.00 மணி-பட்டிமண்டபம்-தலைப்பு-**'திருவாசகத்தில் கற்போர் மனதை ஈர்ப்பது, பத்திச்சுவையே!- இலக்கியச்சுவையே!'**
- 4.00 மணி- பரிசளிப்பு நிகழ்வு-திருவாசகக் கட்டுரைப்போட்டிக்கான பரிசில் வழங்கல்
- 4.20 மணி- நன்றியுரை - சிவத்திரு. **செந்தமிழாதன்** (பொதுச் செயலாளர் - சைவ மாணவர் சபை)

நிகழ்ச்சி முன்வைப்பு - சிவத்திரு. **செந்தமிழாதன்** மற்றும் சிவத்திரு. **பாலுசாமி சிவமாதவன்** (ஆசிரியர்கள் - தென்னாடு திங்கள் இதழ்)

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"
திருச்சிற்றம்பலம்

**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்,**
**கொக்குவில், யாழ்ப்பாணம். 021 222 9722 / 070 770 1111.**

விழா அனுசரணை-

Ken Tower
LAND MAARK ENGINEERING (PVT) LTD


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அடுத்த 5 ஆண்டுகளில்

# இலங்கை மீண்டும் கடன் நெருக்கடியில் சிக்கும்

## 6 அமைப்புகள் கூட்டாக எச்சரிக்கை

(கொழும்பு)

**அடுத்த 5 ஆண்டுகளில் இலங்கை மீண்டும் கடன் நெருக்கடியில் சிக்கிக் கொள்ளக்கூடிய அபாயம் காணப்படுவதாக "பொருளாதார மீட்சிக்கான ஊழல் எதிர்ப்பு சீர்திருத்த சிவில் சமூகக் கூட்டமைப்பு" எச்சரித்துள்ளது.**

நாட்டின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கு அவசியமான ஊழல் எதிர்ப்புசார் மறுசீரமைப்புக்களில் நிலவும் முன்னேற்றமின்மை குறித்து ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா, வெரிட்டே ரிசேர்ச், மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம், சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பு, சர்வவோதயம் மற்றும்தேசிய சமாதானப்பேரவை ஆகிய 6 அமைப்புக்கள் அடங்கிய "பொருளாதார மீட்சிக்கான ஊழல் எதிர்ப்பு சீர்திருத்த சிவில் சமூகக் கூட்டமைப்பு" வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு அரச மற்றும் ஊழல் எதிர்ப்பு மறுசீரமைப்புக்கள் இன்றியமையாதவையாகும். இம்மறுசீரமைப்புக்களுக்கு உரியவாறான முக்கியத்துவம் வழங்கப்படாவிடின், அடுத்த 5 ஆண்டுகளில் இலங்கை மீண்டும் கடன்நெருக்கடியில் சிக்கிக் கொள்ளக்கூடிய அபாயம் காணப்படுகின்றது.

இலங்கை தொடர்பான சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிவசதிச் செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள மறுசீரமைப்பு யோசனைகளைப் பெரிதும் வரவேற்கின்றோம். இருப்பினும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள வெளிப்படைத்தன்மை மற்றும் ஊழலுக்கு எதிரான முக்கிய நடவடிக்கைகள் போன்றவற்றைக்கூட அரசாங்கம் இன்னமும் நடைமுறைப்படுத்தவில்லை.

புதிதாக நிறைவேற்றப்பட்ட ஊழல் எதிர்ப்புச்சட்ட அமுலாக்கம் உள்ளடங்கலாக ஏற்கனவே இணங்கப்பட்ட ஊழல் எதிர்ப்புச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதிலும், அவற்றை உரியவாறு கட்டமைப்பதிலும் அரசாங்கம் மிக மந்தகரமாக செயற்படுவதாகவும் அவை முழுமையடையாமல் இருப்பதாகவும் சர்வதேச நாணய நிதியம் சுட்டிக் காட்டியுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் அண்மைய காலங்களில் அரசாங்கம் சில தீர்க்கமான முடிவுகளை எடுத்து வருகின்றது. அதனடிப்படையில் ஊழலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான செயற்றிட்டங்களை புறக்கணிக்கும் அணுகுமுறையை அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென நாம் வலியுறுத்துகின்றோம் என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

## அமைச்சர் அலி சப்ரி காத்மண்டு பயணம்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர்கள் மட்டத்திலான இலங்கை - நேபாள கூட்டு ஆணைக்குழுவின் ஆரம்ப அமர்வில் கலந்து கொள்வதற்காக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இன்று புதன் கிழமை காத்மண்டு பயணமாகவுள்ளார்.

மேற்படி அமர்வில் இலங்கை சார்பில் கலந்துகொள்ளவிருக்கும் உயர்மட்டக் குழுவுக்குத் தலைமை தாங்கவுள்ள அமைச்சர் அலி சப்ரி, நேபாள வெறியுறவுத்துறை அமைச்சர் நாராயண் பிரகாஷ் சவுத்துடன் இணைந்து இலங்கை - நேபாள கூட்டு ஆணைக் குழுவின் ஆரம்ப அமர்வுக்கு இணைத் தலைமை தாங்குவார் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

நேபாள ஜனாதிபதி ராம் சந்திர பவுடேல் மற்றும் பிரதமர் புஷ்ப கமல் தஹல் ஆகியோரையும் மரியாதை நிமித்தமாக சந்திக்கவிருப்பதாக வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இவ்விஜயத்தின் போது வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நேபாளத்திலுள்ள புலம்பெயர் இலங்கையர்களையும் சந்திக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(நி)

## பிரதமர் தினேஷ் குணவர்தன-பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் சந்திப்பு



(கொழும்பு)

பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் தனது சேவைக் காலம் முடிந்து நாடு திரும்பும் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) உமர் பாரூக் புர்க்கிக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை அலரி மாளிகையில் இடம்பெற்றது.

இதன்போது சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறிப்பாக பௌத்த யாத்ரீகர்களின் பாகிஸ்தானுக்கான விஜயங்கள் குறித்து உயர்ஸ்தானிகர் பிரதமரிடம் விளக்கினார்.

இலங்கையில் புதிய முதலீட்டு வாய்ப்புகளை ஆராயுமாறு பாகிஸ்தான் தொழில் முயற்சியாளர்களிடம் பிரதமர் கேட்டுக் கொண்டதுடன் முதலீட்டாளர்களின் கவனத்திற்கு இதனை கொண்டு செல்வதாக உயர்ஸ்தானிகர் உறுதியளித்தார்.

மேலும் இலங்கையில் தான் பணியாற்றிய காலத்தில் தமக்கு வழங்கிய சிறந்த ஒத்துழைப்புக்காக பாகிஸ்தானின் உயர்ஸ்தானிகர் பிரதமருக்கு நன்றி தெரிவித்தார். (நி)

## மகிந்தவை சந்தித்த உலகத் தமிழர் பேரவை கரி ஆனந்தசங்கரி கடும் அதிருப்தி

(ஒட்டாவா)



உலகத் தமிழர் பேரவையும் கனேடிய தமிழ் காங்கிரஸும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அண்மையில் நேரில் சந்தித்ததையிட்டு தான் கடும் அதிருப்தி அடைவதாக கனடாவின் பழங்குடியின உறவுகள் அமைச்சரான கரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

"பாரிய அளவானதும் கட்டமைக்கப்பட்டதுமான மனித உரிமை மீறல்களுக்காக மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் மீது 2023 ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் திகதி கனேடிய அரசு தடைகளை விதித்தது.

தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள், மனித இனத்துக்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை என்பவற்றுக்கு பொறுப்புக்கூறலை வலியுறுத்தி பல வருடங்களாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலும் ஏனைய சர்வதேச அரங்குகளிலும் குரல் எழுப்பப்பட்ட பின்னரே இது நடைபெற்றது.

தப்பிப்பிழைத்தவர்கள், குடிசார் சமூக அமைப்புகள், இலங்கையில் உள்ள தமிழர்கள் ஆகியோரை கலந்தாலோசிக்காது மேற்கொள்ளப்படும் இந்த முயற்சி முடிவெடுப்பதில் ஏற்பட்ட பாரதூரமான தவறாகும்.

இந்த நடவடிக்கைகள், இந்த அமைப்புகள் மீதும் புலம்பெயர் தமிழர்களை பிரதிநிதித்துவம் செய்வதாகவும் மிக முக்கியமாக தாய்நாட்டில் உள்ள தமிழ் மக்களின் நலன்களுக்காக செயற்படுவதாகவும் இந்த அமைப்புகள் கூறுவதன் மீதும் இருந்த நம்பிக்கையை இழக்கச் செய்துள்ளன.

இலங்கை தீவில் உள்ள தமிழர்கள், பொறுப்புக்கூறலுக்கு தொடர்ச்சியாக அழைப்பு விடுக்கும் பலமானதும் சக்தி வாய்ந்ததுமான குரலைக் கொண்டுள்ளார்கள். அவர்களின் குரலாக இந்த அமைப்புகளின் நிலைப்பாடுகள் அமையவில்லை.

இந்த அமைப்புகளின் தலைமைகளை ஆழ்ந்து சிந்திக்குமாறும் அவற்றின் செயல்களுக்கு பொறுப்புக்கூறுமாறும் நான் கோருகின்றேன் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## 5 வயதிற்குட்பட்ட பிள்ளைகள் இருந்தால்

# வேலைவாய்ப்பிற்காக வெளிநாடு செல்லத் தடை

(கொழும்பு)

ஐந்து வயதிற்குட்பட்ட பிள்ளைகளை கொண்ட தாய்மார்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கு செல்வதை தடுக்கும் சட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த பாராளுமன்ற குழு பரிந்துரைத்துள்ளதாக பாராளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அண்மையில் பாராளுமன்ற வளாகத்தில் கூடிய குழந்தைகள், பெண்கள் மற்றும் பாலின உறவுகளுக்கான துறைசார் மேற்பார்வைக் குழு இந்த பரிந்துரையை அளித்துள்ளது.

தாய்மாரின் கவனிப்பு இல்லாமல் 5 வயது வரை வளரும் பிள்ளைகளுக்கு ஏற்படும் பாதிப்பு அடுத்த 20 முதல் 25 ஆண்டுகளில் மிகப்பெரிய சமூக தாக்கத்தை ஏற்படுத்தும்.

இதன்போது குழந்தை ஒன்று சிறுவயதிலிருந்தே தாயை இழந்தால், எதிர்காலத்தில் மிகவும் வன்முறையான தலைமுறையாக உருவாக வாய்ப்புள்ளது.

அத்துடன் தாய் வெளிநாடு செல்வதால், சிறுவயதிலிருந்தே குழந்தைகள் பராமரிப்பின்றி இருக்கும் நிலையில் எதிர்காலத்தில் போதைப் பொருள் மற்றும் பிற குற்றச் செயல்களில் ஈடுபடும் போக்கும் அதிகரிக்கும் என்பது குழுவின் விவாவத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# இளம் வீரர்களை அணியில் அறிமுகப்படுத்துவது டோனி


ராயுடு

இளம் வீரர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வருவது தான் டோனியின் சிறப்பு என சென்னை அணியின் முன்னாள் வீரர் அம்பதிராயுடு தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், சமீபத்தில் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு பேசிய சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் முன்னாள் வீரர் அம்பதிராயுடு, டோனி இன்னும் 5 ஆண்டுகள் கிரிக்கெட் விளையாட வேண்டும் என்று தனது ஆசையை வெளிப்படுத்தியுள்ளார்.

அத்துடன் டோனி பட்டிங், கீப்பிங் ஆகியவற்றை சிறப்பாக செய்ய கூடியவர் என்பது அனைவருக்கும் தெரியும்.

ஆனால் அதைவிட அவர் இளம் வீரர்களின் திறமைகளை கண்டறிந்து அதை வளர்த்தெடுத்து அணியை சிறப்பாக வழி நடத்துவதில் மிகவும் சிறந்தவர் என டோனிக்கு அம்பதிராயுடு புகழாரம் சூட்டியுள் ளார். (5-6)



# வெஸ்ட் இண்டீசை பந்தாடிய இங்கிலாந்து அணி



வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான 3 ஆவது இருபது-20 போட்டியில் இங்கிலாந்து 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

கிரேனடாவின் தேசிய கிரிக்கெட் மைதானத்தில் நடந்த 3 ஆவது இருபது-20 போட்டியில், நாணய சுழற்சியில் வென்ற இங்கிலாந்து பந்துவீச்சை தெரிவு செய்தது.அதன்படி முதலில் ஆடிய வெஸ்ட் இண்டீஸ் அணியில் பிரண்டன் கிங் 8 ஓட்டங்களிலும் மேயர்ஸ் ரன் எடுக்காமலும் ஆட்ட மிழந்தனர்.

மறுமுனையில் நிக்கோலஸ் பூரன் சிக்ஸர், பவுண்டரிகள் என ருத்ர தாண்டவம் ஆட அவருக்கு உறுதுணையாக பௌல் (39), ரூதர் போர்டு (29), ஹோல்டர் (18) அதிரடி காட்டினர்.

இதன்மூலம் வெஸ்ட் இண்டீஸ் அணி 222 ஓட்டங்கள் குவித்தது.

அதன் பின்னர் களமிறங்கிய இங்கிலாந்து அணியில் தொடக்க வீரர்களான ஜோஸ் பட்லர் மற்றும் பிலிப் சால்ட் இருவரும் வெஸ்ட் இண்டீஸ் பந்துவீச்சை துவம்சம் செய்தனர்.

அரைசதம் விளாசிய பட்லர் 34 பந்துகளில் 51 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

வெஸ்ட் அணியின் பந்துவீச்சை வேட்டையாடிய பிலிப் சால்ட் 56 பந்துகளில் 109 ஓட்டங்கள் குவித்து அணியை வெற்றி பெறவைத்தார். இதன் மூலம் 31 ஓட்டங்கள் குவித்தார். இங்கிலாந்து அணி 19.5 ஓவரில் 226 ஓட்டங்கள் எடுத்து திரில் வெற்றி பெற்றது. (6)

# 4 லட்சம் பாலோயர்ஸ்களை இழந்த மும்பை அணி

இந்தியாவில் 17 ஆவது ஐ.பி.எல் தொடர் வரும்2024 ஆம் ஆண்டு நடக்க இருக்கிறது. ஐ.பி.எல் 2024 தொடருக்கான மினி ஏலமானது துபாயில் வரும் 19 ஆம் திகதி நடக்கஇருக்கிறது. இந்நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு மும்பை அணியின் கப்டனாக ஹர்திக் நிய மிக்கப்பட்டார்.

இதனையடுத்து மும்பை அணி ரசிகர்கள் சமூகவலைத்தளங்களில் எதிர்ப்புகளை தெரி வித்துவந்தனர். மேலும் ரோகித் சர்மாவுக்காக மட்டுமே மும்பை இந்தியன்ஸ் அணிக்கு ஆதரவளித்து வருவதாகவும் பதிவிட்டு வந்தனர்.

இது மட்டுமல்லாமல் மும்பை இந்தியன்ஸ் அணியின் இன்ஸ்டாகிராம் மற்றும் பேஸ்புக் பக்கத்தில் நேற்று வரை 1.5 லட்சம் பாலோ யரஸ்களை மும்பை இந்தியன்ஸ் அணி இழ ந்தது.

இந் நிலையில் 4 லட்சம் பாலோயர்ஸ்களை மும்பை இந்தியன்ஸ் அணி இழந்துள்ளது மேலும் Rip Mumbai Indians என்ற ஹேஸ்டேக் சமூக வலைத்தளங்களில் ட்ரெ ண்டாகி வருகிறது. (5-6)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 82,655 டெங்கு தொற்றாளர்கள்
## இதுவரை பதிவு-தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு

(கொழும்பு)

நாட்டில் இந்த வருடத்தில் மாத்திரம் இதுவரை 82 ஆயிரத்து 655 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்றும் இங்கு 17 ஆயிரத்து 423 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதையடுத்து, அதிகூடிய டெங்கு நோயாளர்கள் கம்பஹா மாவட்டத்தில் பதிவாகியுள்ளதுடன், அந்த எண்ணிக்கை 15 ஆயிரத்து 643 ஆகும்.

இது தவிர கண்டி, புத்தளம், குருநாகல், மட்டக்களப்பு, இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் அதிகூடிய டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். அதேநேரம், இந்த மாதத்தில் மாத்திரம் 6 ஆயிரத்து 165 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது. (நி)

# தமிழ்க்கட்சிகள்-ஜனாதிபதி நாளை சந்திப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு தமிழ்க்கட்சிகளுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது.

இந்த சந்திப்பானது, நாளை 21ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு கொழும்பில் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நீண்டகாலமாக நிலவும் அரசியல் பிரச்சினைகளை தீர்ப்பது மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் உலக தமிழர் பேரவை உள்ளிட்ட தரப்பினர், இமாலய பிரகடனம் ஒன்றை தயாரித்து அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளித்திருந்தனர்.

குறித்த பிரகடனம் முன்வைக்கப்பட்டதன் பின்னர், தமிழ் தேசிய பரப்பில் இயங்கும் கட்சிகளுடன் இடம்பெறவுள்ள முக்கிய சந்திப்பாக இது அமையவுள்ளது. (நி)

# சட்டவிரோத பொருட்களுடன் கட்டுநாயக்கவில் நால்வர் கைது

(கொழும்பு)

வெளிநாட்டிலிருந்து வந்த நான்கு பேர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் சிகரெட் மற்றும் மதுபான போத்தல்கள் உள்ளிட்ட பொருட்களை கொண்டு வந்தவர்களே இவ்வாறு நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்பெறுமதி மூன்று கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. களனி, வீரகெட்டிய, புத்தளம், கொலன்னாவை பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மடிக்கணினிகள் , கையடக்கத் தொலைபேசிகள் , கையடக்கத் தொலைபேசி பாகங்கள் , வெளிநாட்டு சிகரெட்டுகள், மதுபான போத்தல்கள், வாசனை திரவியங்கள் மற்றும் மோட்டார் கார் பாகங்கள் ஆகியன விமான நிலைய பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# மின்கட்டணத்தை குறைக்க வாய்ப்பு-காஞ்சன



(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி மாதம் மின்சார கட்டணம் திருத்தப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்று வரும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

மின் கட்டண திருத்தத்தின் போது அதிகரிக்கப்பட்ட கட்டணத்தை குறைக்க முடியும் என மின்சார சபை அமைச்சுக்கு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மழையுடனான வானிலை காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# எரிபொருள் விலையில் மாற்றம் ஏற்பட வாய்ப்பில்லை
## பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வரி திருத்தச் சட்டம் எதிர்வரும் ஜனவரி 1ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படவுள்ளது.

பொருளாதார நிபுணர்களின் கூற்றுப்படி, சில பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் 20 சதவீதம் அதிகரிக்கும்.

தொலைபேசிகள், சோலார் பேனல்கள், எரிபொருள் மற்றும் தங்க நகைகள் முக்கிய இடத்தைப் பெறும் என்று கூறப்படுகிறது.

எவ்வாறாயினும், உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன் காரணமாக இந்த நாட்டில் எரிபொருளின் விலையில் பெரிய பாதிப்புகள் ஏற்படாது எனவும் பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (நி)

# ஏப்ரல் வரை முட்டை இறக்குமதி

(கொழும்பு)

அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரை முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு தீர்மானித்துள்ளதாக வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

தேவையான அளவு முட்டைகளை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யுமாறு அரச வணிகக் கூட்டுத்தாபனத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் ரஞ்சித் அத்தபத்து குறிப்பிட்டார்.

தற்போது முட்டையொன்று 60 ரூபாவிற்கும் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இராசிபலன்

20.12.2023
மார்கழி 04, புதன்கிழமை,
அட்டமி பிற்பகல்-2.05 மணிவரை

உத்திரட்டாதி பின்னிரவு - 1.44 மணிவரை
சுபநேரம் -4.54-6.24மணிவரை
இராகுகாலம்-12.24-1.54 மணிவரை

சந்திராஷ்டமம்-
ஆயிலியம், மகம்.

வளவன்

**மேஷம்**
ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டிய நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வழக்கத்தை விட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம்.

**கடகம்**
கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும்.

**துலாம்**
தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம், எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, சுபசெய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்**
தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், சகோதர வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**ரிஷபம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்**
பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், உறவினர் நண்பர்களின் மனக்கசப்பிற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது, வழிபாட்டால் வளம் கூடும் நாள்.

**விருச்சிகம்**
சுபசெய்திகள் வந்து சேரலாம், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் நடைபெறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்**
நண்பர்களினால் வளர்ச்சி கூடும், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகம் அடைவீர்கள், பயணங்களால் பலனுண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்**
மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**கன்னி**
குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**தனுசு**
நாணயம் மிக்க நபர்களினால் நம்பிக்கை ஏற்பட லாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**மீனம்**
திட்டமிட்ட பயணமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறும் நாள், புதியவர்களின் நட்பு கிடைக்கும்.

வெற்றியில் ஆணவம் கொண்டவன் தோல்வியை அருகே அழைக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் 435 குடும்பங்களை சேர்ந்த 1,523 பேர் பாதிப்பு

## 24 வீடுகள் பகுதியளவில் சேதம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் பெய்துவரும் மழை காரணமாக 435 குடும்பங்களைச் சேர்ந்த 1,523 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 24 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜ் தெரிவித்தார்.**

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் 146 குடும்பங்களைச் சேர்ந்த 485 பேரும் சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவில் 60 குடும்பங்களைச் சேர்ந்த 205 பேரும் கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 41 பேரும், சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 14 பேரும் உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சங்கானை பிரதேச செயலக பிரிவில் 214 குடும்பங்களைச் சேர்ந்த 267 பேரும் சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவில் 14 குடும்பங்களைச் சேர்ந்த 46 பேர் அன்னை முன்பள்ளி நிலையத்தில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தார். (6-33)



# பாலியாற்று குடிநீர் திட்டம் ஜனவரியில் ஆரம்பிக்கப்படும்



(யாழ்ப்பாணம்)

வடக்கிற்கான பாலியாற்று பாரிய குடிநீர் வழங்கல் திட்டம் - ஜனவரி முதல் வாரத்தில் ஜனாதிபதியின் வடக்கிற்கான விஜயத்தின்போது ஆரம்பித்து வைக்கப்படும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வடக்கு மக்களின் நீண்டகால குடிநீர்ப் பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு பாலியாற்று நீர் வழங்கல் திட்டத்தை முன்னெடுக்கும் முக்கிய கலந்துரையாடல் கடற்றொழில் அமைச்சரும் யாழ்-கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக்குழு தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இத்திட்டம் தொடர்பில் கடந்த காலங்களில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அது கைகூடாத நிலையில் கடந்த ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

இதேவேளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சியின் பலனாக அமைச்சரவை இத்திட்டத்திற்கு 250 மில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கான அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது.

இக் கலந்துரையாடலில் மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன், நீர்ப்பாசன நீர்வழங்கல் முகாமையாளர்கள், சி.வி.கே.சிவஞானம் மற்றும் துறைசார் அதிகாரிகள் கலந்துகொண்டனர். (6)

# 20.75 மெ.தொன் உருளைக்கிழங்கு விதைகள் பழுதடைந்த நிலையில்



(யாழ்ப்பாணம்)

காலபோக செய்கைக்காக விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 20.75 மெற்றிக்தொன் உருளைக்கிழங்கு விதைகள் பாவனைக்கு உதவாத நிலையில் காணப்படுவதாக தெரியவந்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் நேற்று முன்தினம் மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த அரச அதிபர் குறித்த உருளைக்கிழங்கு விதைகள் ஒருவகை பக்றீரியாவால் பாதிக்கப்பட்டுள்ளன. பழுதடையாதவற்றை தெரிவு செய்து பாவித்தாலும் மண்ணுக்கும் பயிருக்கும் பாதிப்பை ஏற்படுத்தும்.

இது தொடர்பில் ஆராய்ந்த பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (6-33)



அம்பன் அ. மி. த. க. பாடசாலையின் மாகாண மட்ட எல்லே போட்டியில் சம்பியனான மாணவர் அணிக்கு கடந்த சனிக்கிழமை பாடசாலையில் வைத்து பதக்கமும் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. (படம்:-மகாலிங்கம்)

# நல்லூரானை தரிசித்த ரம்பா



(யாழ்ப்பாணம்)

யாழிற்கு வருகை தந்துள்ள தென்னிந்திய நடிகை ரம்பா நேற்று செவ்வாய்க்கிழமை காலை நல்லூர் ஆலயத்திற்கு தனது குடும்பத்துடன், சென்று வழிபாட்டில் ஈடுபட்டார்.

அதேவேளை நடிகை ரம்பாவின் கணவரின் நொர்தேன் யுனி கல்வி நிலையத்தின் ஏற்பாட்டில் 21 ஆம் திகதி நடைபெறவிருந்த இசை நிகழ்வு யாழில் நிலவும் சீரற்ற கால நிலை காரணமாக எதிர்வரும் பெப்ரவரி 9ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-33)

# மாவா பாக்குடன் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழில் மாவா பாக்குடன் இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், கொக்குவில் கிழக்கு பகுதியை சேர்ந்த இரண்டு இளைஞர்களை நேற்று முன்தினம் கைது செய்து சோதனையிட்ட போது அவர்களிடம் இருந்து, தலா 50 கிராம் மாவா பாக்கு பொட்டலங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அதனை அடுத்து கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து, வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (6-33)

# இளைஞன் படுகொலை வழக்கு ஜனவரி மாதம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை இளைஞன் படுகொலை தொடர்பிலான மரண விசாரணை தொடர்பிலான கட்டளை எதிர்வரும் ஜனவரி மாதம் 2 ஆம் திகதி வழங்கப்படும் என தெரிவித்த நீதிவான் அன்றைய தினத்திற்கு வழக்கினை ஒத்தி வைத்தார்.

வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞன் சித்திரவதைகளுக்கு உள்ளான நிலையில் கடந்த நவம்பர் மாதம் 19 ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

அது தொடர்பிலான வழக்கு விசாரணைகள் யாழ். நீதிவான் நீதிமன்றில் நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் நடைபெற்று வருகின்றது.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போது மல்லாகம் நீதிவான் முன்னிலையில் சாட்சிகள் தமது சாட்சியங்களைப் பதிவு செய்தனர்.

அதேவேளை, தெல்லிப்பழை மருத்துவமனை சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை மற்றும், யாழ். போதனா மருத்துவமனையில் இளைஞனை அனுமதித்து சிகிச்சை வழங்கிய வைத்திய அறிக்கையையும் மன்றில் சமர்ப்பிக்க ஆவணை செய்யுமாறு யாழ். நீதிமன்ற பதிவாளருக்கு நீதிவான் உத்தரவிட்டார். (6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளை அஸ்கிரிய பீடம் குழப்பாது- தம்மானந்த தேரர்



(கொழும்பு)

பன்முகத்தன்மை கொண்ட சமூகத்தை கட்டியெழுப்புவதற்காக தமிழ் புலம்பெயர் அமைப்பான உலக தமிழர் பேரவை பௌத்த மதகுருமார்கள் குழுவொன்றுடன் இணைந்து முன்னெடுத்துள்ள இமாலய பிரகடனம் தெளிவற்றது என தெரிவித்துள்ள அஸ்கிரிய பீடம் எனினும் முன்னேற்றகரமான விடயங்கள் இடம்பெற்றால் அதற்கு பௌத்தமத குருமார் ஆதரவளிப்பார்கள் எனவும் தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் உலக தமிழர் பேரவையும் பௌத்த மதகுருமாரும் இணைந்து இமாலயப் பிரகடனத்தினை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்திருந்தனர்.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள அஸ்கிரிய பீடத்தின் பேரவைகளின் செயலாளர் மெதகம தம்மானந்த தேரர் தேசிய ஐக்கியத்தினையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கு எடுக்கப்படும் எந்த முயற்சிகளையும் அஸ்கிரிய பீடம் குழப்பாது.

எனினும் அது நாட்டின் சகவாழ்விற்கும் ஒருமைப்பாட்டிற்கும் தீங்கு விளைவிக்காமல் இருந்தால் மாத்திரமே அதற்கு ஆதரவளிப்போம்.

எனினும் பிரகடனத்தின் நோக்கங்கள் தெளிவற்றதாக உள்ளது என தெரிவித்துள்ள அவர் இதனை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் இந்த பிரகடனத்தின் நோக்கம் தெளிவாக இல்லை.

ஏதாவது சிறந்த விடயங்கள் இடம்பெறவேண்டும் என அஸ்கிரிய பீடம் விரும்புகின்றது. குறிப்பிட்ட பிரகடனத்தை நடைமுறைப்படுத்துவதால் ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்து கருத்து தெரிவிக்கப்போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# அடையாள அட்டைகளுக்கான புகைப்படக் கட்டணம் அதிகரிப்பு

(கொழும்பு)

அடையாள அட்டை அல்லது நகல் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் நபரின் டிஜிட்டல் நகல் எடுப்பதற்கு பதிவு செய்த புகைப்படக் கலைஞரால் வசூலிக்கப்படும் அதிகபட்ச கட்டணம் ரூ.400 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இதன்படி, 2016 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டிருந்த விலை இரத்துச் செய்யப்படுவதாக பொது பாதுகாப்பு அமைச்சு விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டது.

இதற்கு முன்பு அதிகபட்சமாக 150 ரூபாய் வசூலிக்கப்பட்டது. ஒரு அடையாள அட்டை அல்லது அடையாள அட்டையின் நகல் நகலைப் பெறுவதில், விண்ணப்ப தாரர்கள் பதிவு செய்யப்பட்ட புகைப்படக் கலைஞரால் எடுக்கப்பட்ட புகைப்படங்களை ஒன்லைன் அமைப்பு மூலம் ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டும்.

இதேவேளை, எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் டிஜிட்டல் அடையாள அட்டை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் கீழ், புதிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு டிஜிட்டல் அடையாள அட்டை வழங்கவும் பின்னர் படிப்படியாக ஒட்டுமொத்த சமூகத்திற்கும் டிஜிட்டல் அடையாள அட்டை வழங்கவும் அரசு திட்டமிட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு நாட்டில் தொழில் நுட்ப பற்றாக்குறையும் ஒரு காரணம் என தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் குறிப்பிட்டுள்ளார். (நி)

# மியன்மார் பயங்கரவாதக் குழுவின் பிடியில் 56 இலங்கையர்கள்

(கொழும்பு)

தாய்லாந்தில் வேலைக்காக சென்ற 56 இலங்கையர்கள் மியன்மாரை சேர்ந்த பயங்கரவாத குழுவொன்றிடம் சிக்குண்டுள்ளனர்.

அவர்கள் மியன்மாரின் பயங்கரவாத குழுவின் சைபர் குற்றங்களிற்கான பகுதியொன்றில் உள்ள முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவர்களை விடுவிப்பதற்காக தலா ஒரு நபரிடமிருந்து 8000 அமெரிக்க டொலர்களை பயங்கரவாத குழுவினர் கோருகின்றனர்.

இது குறித்து அறிந்துள்ளதாக மியன்மாருக்கான இலங்கை தூதுவர் தெரிவித்துள்ளார்.

மியன்மார் அதிகாரிகளுடனான பேச்சுவார்த்தைகளின் பின்னர் 32 பேரை விடுவித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஏனைய 56 பேரையும் விடுதலை செய்வதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன என தெரிவித்துள்ள மியன்மாருக்கான இலங்கைத் தூதுவர் சட்டவிரோதமான வழிமுறைகள் மூலம் மியன்மார் அல்லது தாய்லாந்திற்கு செல்ல முயல வேண்டாம் என கேட்டுக்கொண்டுள்ளார். (நி)

## சிறைச்சாலை பேருந்துகளில் இனி சி.சி.ரீவி

(கொழும்பு)

சிறப்பு பிரிவு கைதிகளை ஏற்றிச் செல்லும் சிறைச்சாலை பேருந்துகளில் கமராக்களைப் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு நடவடிக்கை களை பலப்படுத்தும் நோக்கில் இவ்வாறு கமராக்கள் பொருத்தப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் காமினி டீ திசாநாயக்க தெரிவித்தார்.

சிறைச்சாலைகளில் இருந்து கைதிகள் வெளியில் அழைத்துச் செல்லப்படும் சந்தர்ப்பங்களில் அவர்களின் செயற்பாடுகள் தொடர்பில் இதனூடாக கண்காணிக்க முடியும் என அவர் குறிப்பிட்டார். (நி)

# சுரங்கத்துறையில் முதலீடு செய்யுமாறு இலங்கைக்கு ஆபிரிக்கா அழைப்பு

(கொழும்பு)

மேற்கு ஆபிரிக்க நாடான புர்கினா பாசோவின் இலாபகரமான சுரங்கத் துறையில் முதலீடுகளை செய்யுமாறு இலங்கை வர்த்தகர்களுக்கு அந் நாட்டு இடைக்கால ஜனாதிபதி இப்ராஹிம் தாரோர் அழைப்பு விடுத்துள்ளார்.

புர்கினா பாசோவில் தங்கம் மற்றும் துத்தநாகம் போன்ற கனிமங்களின் குறிப்பிடத்தக்க இருப்புக்கள் உள்ளன.

இந்தநிலையில் கென்யாவிலுள்ள இலங்கை தூதுவர் கனகநாதனை அண்மையில் சந்தித்தபோது அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இந்த சந்திப்பின் போது, தூதரக உறவுகளை வலுப்படுத்துவதற்கும் புர்கினா பாசோவுடனான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும் இலங்கையின் அர்ப்பணிப்பை தூதுவர் கணநாதன் வெளியிட்டுள்ளார். (நி)

# கீரிச்சம்பாவுக்கு பதிலாக ஜி.ஆர் 11 அரிசி இறக்குமதி



(கொழும்பு)

கீரி சம்பா அரிசிக்குப் பதிலாக 50,000 மெற்றிக் தொன் ஜி.ஆர் 11 ரக அரிசியை தனியார் துறையினர் இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சந்தையில் அரிசி விலையைக் கட்டுப்படுத்த உணவுக் கொள்கைக் குழுவின் பரிந்துரையின் பேரில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்தே அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டது.

உள்ளூர் சந்தையில் கீரி சம்பா மற்றும் சம்பா அரிசியின் விலையை போட்டியாக வைத்து நுகர்வோருக்கு விலை அனுகூலத்தை வழங்கும் நோக்கில் இந்த அரிசியின் இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி)

# கோழி உணவு உற்பத்திக்கான மூலப்பொருட்கள் தட்டுப்பாடு

## சோள இறக்குமதிக்கு அனுமதி



(கொழும்பு)

வரையறுக்கப்பட்ட இலங்கை அரச வர்த்தக (பல்நோக்கு) கூட்டுத்தாபனத்தின் மூலம் சோளத்தை இறக்குமதி செய்ய அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

திறந்த சந்தையில் போதியளவு சோளம் இன்மையால், கோழி உணவு உற்பத்திகளுக்குத் தேவையான மூலப்பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது.

அதற்காக தற்காலிக நடவடிக்கையாக கால்நடை உற்பத்திகள் மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் மூலம் 15,000 மெற்றிக்தொன் சோளம் இறக்குமதி செய்வதற்காக வரையறுக்கப்பட்ட இலங்கை அரச வர்த்தகக் (பல்நோக்கு) கூட்டுத்தாபனத் திற்குத் தேவையான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. (நி)

# புதிய வைரஸ் திரிபால் இலங்கைக்கு பாதிப்பில்லை

## சுகாதார அமைச்சு தகவல்

(கொழும்பு)

இந்தியாவில் பரவலாகக் காணப்படும் கொவிட்-19 வைரஸின் வேகமாகப் பரவும் மாறுபாடான JN.1 வைரஸால் பாதிக்கப்பட்ட எந்தவொரு நோயாளியும் நாட்டில் பதிவாக வில்லை என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த புதிய மாறுபாடு இந்தியாவின் கேரளாவில் பதிவாகியதையடுத்து, இந்நாட்டின் சுகாதார அதிகாரிகள் விசேட கவனம் செலுத்தியுள்ளதாக சுகாதார அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

ஓமிக்ரோன் JN.1 கொவிட் வைரஸின் புதிய துணை வகையாக அடையாளம் கண்டுள்ளது. மேலும் இந்த வைரஸ் கேரளாவில் ஒரு பெண்ணிடம் பதிவாகியுள்ளது.

வெளிநாட்டில் பரவும் எந்தவொரு புதிய நோயும் இலங்கைக்கு அச்சுறுத்தலாக அமையும் எனவும் அது தொடர்பில் எப்போதும் அவதானம் செலுத்தப்படும் எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

JN.1 வைரஸ் திரிபு என்பது மற்ற அனைத்து துணை வகைகளிலிருந்தும் கணிசமாக வேறுபடும், வேகமாக பரவும் திரிபு என்று நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த புதிய துணை வகையின் அறிகுறிகள் காய்ச்சல், மூக்கு வடிதல், தொண்டை புண், தலைவலி, இரைப்பை குடல் வலிபோன்றவையாகும். இந்த வைரஸ் மாறுபாடு ஓகஸ்ட் மாதம் முதல் அமெரிக்காவிலும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாசகர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

## ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் யாசகர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

சமூக சேவை திணைக்களம் மேற்கொண்ட ஆய்வு மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

65 மாநகரசபைகள் மற்றும் நகர சபைகளை மையப்படுத்தி இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த ஆய்வில் சுமார் 3700 யாசகர்கள் பற்றிய தகவல்கள் பதிவாகியுள்ளன.

மேல் மாகாணத்தில் மட்டும் 1600 யாசகர்கள் இருப்பதாக சமூக சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு நகரிற்கு அண்மையில் சுமார் ஆயிரம் யாசகர்கள் வருகை தந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொருளாதார நெருக்கடி நிலைமைகளினால் சில நிறுவனங்கள் மூடப்பட்டதன் காரணமாக பணியிலிருந்து நீங்கிய பலர் யாசகம் செய்வதாக இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது. (நி)

# இறக்குமதியாகும் பெரிய வெங்காயம்

(கொழும்பு)

பாகிஸ்தானில் இருந்து பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்வது தொடர்பாகவும் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

பெரிய வெங்காயத்தின் விலையை கட்டுப்படுத்தும் நோக்கில் குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

தற்போது சந்தையில் 1 கிலோ பெரிய வெங்காயம் 500 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றது.

இந்தியாவில் பெரிய வெங்காய ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால் பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பெரிய வெங்காய இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர். (நி)

# சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் நாட்டிற்கு 1.3 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

இதனிடையே டிசெம்பர் முதலாம் திகதி முதல் கடந்த ஞாயிற்றுக்கிழமை வரையில் ஒரு இலட்சத்து 750 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

இந்த காலப்பகுதியில் இந்தியாவில் இருந்து 20 ஆயிரத்து 597 சுற்றுலாப் பயணிகளும் ரஷ்யாவிலிருந்து 14 ஆயிரத்து 156 சுற்றுலாப் பயணிகளும் ஐக்கிய இராச்சியத்திலிருந்து 10 ஆயிரத்து 281 சுற்றுலாப்பயணிகளும் வருகை தந்துள்ளனர். ஜேர்மனி, சீனா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா பிரான்ஸ், கனடா மற்றும் போலந்து ஆகிய நாடுகளில் இருந்தும் சுற்றுலாப் பயணிகளின் வருகை பதிவுசெய்யப்பட்டுள்ளன. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 450 | 400 | 500 |
| உருளைக்கிழங்கு | 150 | 180 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 1000 | 1200 | 1100 | 1400 |
| தக்காளி | 600 | 700 | 700 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 150 | 140 | 120 |
| கோவா | 400 | 420 | 400 | 500 |
| கரட் | 450 | 550 | 550 | 650 |
| பூசணி | 180 | 180 | 160 | 200 |
| புடோல் | 300 | 300 | 200 | 300 |
| வாழைக்காய் | 200 | 200 | 140 | 250 |
| சின்ன வெங்காயம் | 400 | 400 | 400 | 500 |
| பெரிய வெங்காயம் | 450 | 450 | 420 | 500 |
| பாகற்காய் | 700 | 800 | 600 | 800 |
| வெண்டக்காய் | 300 | 280 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 140 | 160 |
| பயற்றங்காய் | 600 | 700 | 400 | 300 |
| லீக்ஸ் | 380 | 400 | 400 | 400 |
| பீற்றூட் | 350 | 500 | -- | 700 |
| கறிமிளகாய் | 800 | 600 | 600 | 700 |
| முருங்கைக்காய் | -- | -- | 1600 | -- |
| போஞ்சி | 350 | 350 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 450 | 300 | 350 | 450 |
| கீரை - 1 பிடி | 150 | 150 | 150 | 200 |
| தேசிக்காய் | 600 | 700 | 250 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 90 | 70-100 |
| இராசவள்ளி | 450 | 500 | 500 | 600 |
| வெங்காயப்பூ | -- | -- | -- | -- |
| முள்ளங்கி | 160 | 200 | -- | 400 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 200 | 60 |
| வல்லாரை | 80 | 40 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 200 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2995

### சாம்பவி




### கஷ்மியா




### மயூரன்




### தாஸ்




### சுமன்




### பிறேமினி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்[illegible] பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீவைகுண்டத்தில் 800 பயணிகளுடன் வெள்ளத்தில் சிக்கிய ரயில்

(டில்லி)

**தமிழகத்தில் பெய்து வரும் கனமழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக ரயிலில் பயணம் செய்த 800 இற்கும் மேற்பட்ட பயணிகள் ரயிலில் சிக்கியுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**



திருச்செந்தூரில் இருந்து சென்னையை நோக்கி 800 பயணிகளுடன் செந்தூர் எக்ஸ்பிரஸ் ரயில் நேற்று முன்தினம் இரவு புறப்பட்டு சென்றது.

இதனிடையே, தென் மாவட்டங்கள் முழுவதுமாக பலத்த மழை பெய்து வந்த நிலையில், மேற்கொண்டு போக முடியாமல் ஸ்ரீவைகுண்டத்தில் பாதி வழியிலேயே ரயிலை ஓட்டுநர் நிறுத்திவிட்டார்.

தொடர்ந்து மழை பெய்ததால் ரயில் தண்டவாளத்துக்கு கீழே மண் அரிப்பு ஏற்பட்டு அந்தரத்தில் ரயில் தொங்கி நின்றது.

இருப்பினும் ரயிலில் பயணம் செய்த கிட்டத்தட்ட 300 பயணிகளை மீட்புக் குழுவினர் காப்பாற்றியுள்ளனர். சீரற்ற காலநிலை காரணமாக நேற்று முன்தினம் தற்காலிகமாக நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு மீண்டும் மீட்புப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (5)

## இந்தியாவில் உலகின் மிகப்பெரிய வர்த்தக கட்டடத்தை திறந்து வைத்த மோடி




(டில்லி)

உலகின் மிகப்பெரிய வர்த்தக கட்டடமான இந்தியாவிலுள்ள சூரத் வைர பங்குச்சந்தை அலுவலக கட்டடத்தை இந்திய பிரதமர் நரேந்திர மோடி கடந்த ஞாயிற்றுக் கிழமை திறந்து வைத்துள்ளார்.

இந்தியாவின் வைரத் தொழிலின் தலைநகரமாக குஜராத்தின் சூரத் நகரம் விளங்குகின்றது. இங்கு உலகின் 90 சதவீத வைரங்கள் பட்டை தீட்டப்படுவதாக கூறப்படுகின்றது.

இந்த தலைநகரில் வைரத்தை வெட்டுதல், பட்டை தீட்டுதல் மற்றும் வியாபாரம் செய்தல் என்பவற்றில் 65 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

அவர்கள் அனைவரையும் ஒரே இடத்தில் ஒருங்கிணைத்து செயற்படும் விதமாக, "சூரத் வைர பங்குச் சந்தை" என்ற மிகப்பெரிய அலுவலகம் கட்டப்பட்டுள்ளது.

சூரத் வைர நகரில் 35 ஏக்கர் நிலப்பரப்பில், தலா 15 மாடிகளைக் கொண்ட 9 செவ்வக வடிவ அமைப்புகளாக இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த அலுவலக கட்டட வளாகத்தின் மொத்த தள பரப்பளவு 70 இலட்சத்து 10 ஆயிரம் சதுர அடி ஆக காணப்படுகின்றது.

இதேவேளை உலகிலேயே மிகப்பெரிய அலுவலக கட்டடமாக இருந்த பென்டகனை, சூரத் வைர வர்த்தக மைய கட்டடம் முந்தியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், 4,700 அலுவலகங்கள் உள்ள இந்த வர்த்தக மையத்தில் 65 ஆயிரம் பேர் பணியாற்ற முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

## ஒரே நேரத்தில் 4 இலக்குகளை தாக்கும் ஏவுகணை



(டில்லி)

வானில் 25 கி.மீ தூரம் வரை சென்று இலக்குகளை அழிப்பதற்காக இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தால் ஏவுகணை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

ஒரே நேரத்தில் 4 இலக்குகளை தாக்கி அழிக்கும் திறன் வாய்ந்த இந்த ஏவுகணை அமைப்பு கடந்த ஞாயிற்றுக்கிழமை விமானப்படை அதிகாரிகளால் சோதித்து பார்க்கப்பட்டது.

இதன் மூலம் ஒரே ஏவுதல் அலகில் இருந்து 4 இலக்குகளை ஒரே நேரத்தில் தாக்கி அழிக்கும் திறன் வாய்ந்த ஏவுகணை அமைப்பை கொண்டிருக்கும் முதல் நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளது. (5)

## முருகனை லண்டனுக்கு அனுப்ப மறுப்பு தெரிவித்த இந்திய அரசு

(டில்லி)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து விடுதலையான முருகனை லண்டனுக்கு அனுப்ப முடியாது என சென்னை உயர்நீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்தது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனைக் கைதிகளாக இருந்த நளினி, முருகன், சாந்தன் உட்பட ஏழு பேரை விடுதலை செய்து, 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதையடுத்து விடுதலை செய்யப்பட்ட இலங்கையைச் சேர்ந்த முருகன், சாந்தன் உள்ளிட்டோர் அகதிகள் முகாமில் அடைக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்த நிலையில், லண்டனில் வசிக்கும் தன் மகளுடன் சேர்ந்து வாழ விரும்புவதால், கடவுச்சீட்டு கேட்டு விண்ணப்பிப்பதற்காக திருச்சி சிறப்பு முகாமிலிருந்து சென்னையிலுள்ள இலங்கை தூதரகத்துக்குச் சென்று வருவதற்கு பாதுகாப்பு வழங்க, சென்னை பொலிஸாருக்கு உத்தரவிடக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் முருகன் மனுத்தாக்கல் செய்தார்.

இந்த மனு நீதிபதிகள் கிருஷ்ணகுமார், தனபால் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, மத்திய அரசு தரப்பில் கூடுதல் சொலிசிடர் ஜெனரல் ஏ.ஆர்.எல்.சுந்தரேசன் முன்னிலையாகி, கொலை வழக்கில் குற்றவாளியான இலங்கையைச் சேர்ந்த முருகனை லண்டனுக்கு அனுப்ப முடியாது எனவும் இலங்கை நாட்டின் துணை தூதரகம் ஆவணங்களை வழங்கினால் மட்டுமே அந்த நாட்டுக்கும் திருப்பி அனுப்ப முடியும் என்றும் தெரிவித்தார்.

தமிழக அரசு தரப்பில், திருச்சி சிறப்பு முகாமிலிருந்து சென்னையிலுள்ள இலங்கை தூதரகத்துக்கு முருகனை அழைத்துவர பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ஐ.நாவின் தடையை மீறும் வடகொரியா

# மீண்டும் ஏவுகணை பரிசோதனை

(பியாங்யாங்)

**ஐ.நாவின் தடைகளை மீறி வடகொரியா தனது அதிநவீன நீண்ட தூர ஏவுகணை பரிசோதனையை மேற்கொண்டுள்ளதாக தென்கொரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**



வடகொரிய மற்றும் அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் கடந்த வாரம் சந்தித்த நிலையில் இந்த ஏவுகணை பரிசோதனை இடம் பெற்றுள்ளது.

வட அமெரிக்க கண்டத்தை அடையும்வரம்பைக் கொண்ட இந்த ஏவுகணையானது 73 நிமிடங்கள் பயணித்ததாக தென் கொரிய மற்றும் ஜப்பானிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த பரிசோதனையானது ஐ.நா பாதுகாப்பு சபையின் தீர்மானங்களை மீறுவதாக தென் கொரியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் கண்டனம் வெளியிட்டுள்ளன. (5)

## சீனாவில் பாரிய பூகம்பம் 111 பேர் பலி, 200 பேர் காயம்

(பீஜிங்)

சீனாவின் வடமேற்கு பகுதியில் பூகம்பம் தாக்கியதில் 111 பேர் உயிரிழந்துள்ளதோடு 200 இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

இந்த நில அதிர்வானது ரிக்டர் அளவுகோலில் 5.9 மெக்னிடியூட்டாக பதிவாகியுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனால் சீனாவின் கன்சு மற்றும் அதன் அண்டைய மாகாணமாக கிங்காய் ஆகிய மாகாணங்களில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.



தொடர்ந்தும் மீட்பு பணிகள் இடம்பெற்று வரும் நிலையில், பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சில கிராமங்களிற்கான மின்விநியோகமும் நீர் விநியோகமும் துண்டிக்கப்பட்டுள்ளதாக சீன ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (5)

## ஹவுதி கிளர்ச்சியாளர்களின் தாக்குதலை தடுக்க புதிய திட்டம்

அமெரிக்கா

(வோஷிங்டன்)

செங்கடல்பகுதியில்ஹவுதி கிளர்ச்சியாளர்களின் தாக்குதலைத் தடுக்க அமெரிக்கா புதிய திட்டத்தை உருவாக்கியுள்ளது.

இஸ்ரேல்- ஹமாஸ் அமைப்பினர் இடையேயான போரில் ஏமனில் செயற்படும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஹமாஸ் அமைப்புக்கு ஆதரவாக உள்ளனர். இதையடுத்து செங்கடல் பகுதியில் இஸ்ரேலை நோக்கி செல்லும் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்துவோம் என்று தெரிவித்தனர். அதன்படி செங்கடல் பகுதியில் சென்ற வணிக கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தினர்.

இந்த நிலையில் செங்கடல் பகுதியில் ஹவுதி கிளர்ச்சியாளர்களின் தாக்குதலை தடுக்க அமெரிக்கா புதிய திட்டத்தை உருவாக்கி உள்ளது. இதில் 10 நாடுகளை இணைத்து படையை உருவாக்கி செங்கடலில் கண்காணிப்பில் ஈடுபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் கூறியதாவது.

செங்கடல்பகுதியில்ஹவுதி கிளர்ச்சியாளர்களின் தாக்குதலை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். இது ஒரு சர்வதேச சவாலாகும். இதற்கு புதிய பன்னாட்டு பாதுகாப்பு முயற்சியை அறிவித்துள்ளோம் எனத் தெரிவித்தார்.(5)

# இது அமெரிக்காவின் போர்

## நெதன்யாகு திட்டவட்டம்



(ஜெருசலேம்)

இது எங்களுடைய போர் மட்டுமின்றி, பல வழிகளில் அமெரிக்காவின் போரும் கூட என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறியுள்ளார்.

ஹமாஸ் அமைப்பு, கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் எல்லைக்குள் புகுந்து அதிரடியாக தாக்குதலில் ஈடுபட்டது.

பெண்கள், முதியவர்கள் என பலரையும் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தியது. 200 இற்கும் மேற்பட்டோரை பணயக் கைதிகளாக சிறைப்பிடித்து சென்றது.

இந்த நிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் லாய்டு ஆஸ்டினுடன் இணைந்து கூட்டாக பத்திரிகையாளர் சந்திப்பை நடத்தினார்.

அப்போது, இஸ்ரேலுக்கு அமெரிக்கா ஆதரவளித்து வருவதற்காக தனது நன்றியை தெரிவித்து கொண்டார்.

தொடர்ந்து அவர் கூறும்போது, "காட்டுமிராண்டித்தனத்திற்கு எதிரான நாகரிகத்தின் போரை நாங்கள் நடத்தி கொண்டிருக்கிறோம்.

நாங்கள் எப்போது பேசுகிறோமோ அப்போது, ஹமாஸ் அமைப்புக்கு எதிராக ஒட்டுமொத்த வெற்றியை பெற வேண்டும் என்ற எங்களுடைய ஈடுபாட்டை நான் மீண்டும் வெளிப்படுத்துகிறேன்" என்று கூறியுள்ளார்.

இது எங்களுடைய போர் மட்டுமின்றி, பல வழிகளில் உங்களுடைய போரும் கூட என நாங்கள் நினைக்கிறோம்.

ஏனெனில், உலகில் நாகரிகத்தின் சக்தியை நீங்கள் வழிநடத்தி செல்கிறீர்கள் என்று அமெரிக்காவை குறிப்பிட்டு பேசியுள்ளார்.(5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லை ஆதீன சுவாமிகளின் அருளாசிச் செய்தி



வலம்புரி சங்குநாதம் பத்திரிகை இன்று தனது 24 ஆண்டுகளை நிறைவாக்கி 25 ஆவது ஆண்டில் தன்பணியைத் தொடர்வது அனைவருக்கும் மகிழ்ச்சியினைத் தருகின்றது.

பத்திரிகைத் துறையில் தனக்கென ஓர் இடத்தினைப் பிடித்து உலக வாழ் தமிழ் மக்களிற்கு நற்கருத்துக்களை வெளிப்படுத்துவது அனைவருக்கும் மகிழ்ச்சியினைத் தருகிறது.

பத்திரிகைத் தர்மத்தினைப் பேணும் வகையில் அரசியல், பொருளாதாரம், ஆன்மிகம் உட்பட அனைத்து விடயங்களையும் மக்களிற்கு விளங்கிக் கொள்ளும் வகையில் வெளிப்படுத்துவதும் இனிவரும் ஆண்டுகளில் தன் பணியினைச் சிறப்புற செய்திடவும் இறையருளை வேண்டுகின்றோம். பணிப்பாளர், செய்தி, உதவி ஆசிரியர்கள், ஊழியர்கள், விநியோகஸ்தர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

" என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், இரண்டாவது குரு மகா சந்நிதானம்,**
**நல்லை ஆதீனம்.**

## தனித்துவமான ஆசிரியர் தலையங்கம்



வலம்புரி நாளிதழ் தனது 24 ஆம் ஆண்டு அகவையை நிறைவு செய்து அகவை 25 இல் கால் பதிக்கும் இந்நன்னாளில் எமது ஆசியினையும் வாழ்த்துக்களை யும் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்வு அடைகின்றோம்.

ஒரு நாட்டின் இறைமைக்கும் பண்பாட்டிற்கும் கலாசா ரத்திற்கும் சமூகத்தால் மேற்கொண்டுவரும் விழுமியங்கள் எவ்வளவு அவசியமோ அந்தளவிற்கு ஒரு பத்திரிகையின் செயற்பாடும் அவசியமாகும். இந்நிலையை பேணிக்காப்பதில் வலம்புரிப் பத்திரிகை சிறந்து விளங்குகின்றது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஒரு பத்திரிகை நடுவுநிலைமை தவறாமல் பத்திரிகைத் தர்மத்தை பேணிவருவதன் மூலம்தான் அப்பத் திரிகை வளர்ச்சியடைய முடியும். அத்துடன் கருத்தாழமிக்க ஆசிரியர் தலையங்கம் வலம்புரியின் சங்குநாதமாக ஒலிப்பதும் கண்கூடு.

தனித்துவமான ஆசிரியர் தலையங்கமும் உடனுக்குடன் வெளிவரும் உண்மைச் செய்திகளும் நாளும் பொழுதும் வலம்புரியின் வாசகர் வட்டம் விரிந்துசெல்ல காரணமாகின்றது. பத்திரிகையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக, அர்ப்பணிப்புடன் பணியாற்றும் வலம்புரிக் காரியாலயத்தைச் சார்ந்த அனைவரும் உறுதியுடன் செயலாற்றவும் அத்தகைய பணியின் மூலம் வலம்புரி நாளிதழ் மென்மேலும் 'பிரகாசிக்க சந்நிதி வேற்' பெருமானின் அருளை வேண்டி நிற்கின்றோம்.

**செ.மோகனதாஸ் சுவாமிகள்,**
**சந்நிதியான் ஆச்சிரமம்,**
**செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.**

## வலம்புரியே வாழியவே!

வையகம் போற்ற வலம்வரும் வலம்புரியே
வாசகர் மனம் கவர்ந்த சங்குநாதமே
இருபத்திநான்காம் அகவை நாளில் வாழ்த்துகிறோம்
இன்னும் பல்லாண்டு வலம் வருகவே!

விடிகாலை வேளை கையில் தவழ்ந்திடுவாய்
விந்தைமிகு உலகின் செய்தி தந்திடுவாய்
விரைவாக செய்தி கிடைக்கச் செய்திடுவாய்
வியக்கதகு வளர்ச்சி கண்டு சிறந்திடுவாய்

இரசனைமிகு ஆசிரியர் தலைப்பும் கொண்டாய்
இதயம்கவர் சிறுவர் கதையும் காவிடுவாய்
உள்ளதை உள்ளபடியே சொல்லி உயர்ந்திடுவாய்
உண்மையின் நடுவுநிலை என்றும் காத்திடுவாய்

வண்ணத்தமிழ் தன்னை நீயும் வளர்த்திடுவாய்
வலம்புரியே என்றென்றும் வலம் வந்திடுவாய்
வார இறுதியில் சங்குநாதமாய் ஒலித்திடுவாய்
வியாசர் பதிலும் சிறப்பாய் தந்திடுவாய்

ஆலடிமாநாட்டால் வாசகரை நீயும் கவர்ந்திடுவாய்
அரிய தொடராம் கடல்புறா தாங்கிடுவாய்
பொன்னியின் செல்வனும் சிறப்பாய் கொண்டுவருவாய்
பெறுமதிமிகு சுகமான விடியலும் காவிடுவாய்

முகப்புத்தகத்தில் பிடித்ததும் சுவைப்பட தந்திடுவாய்
முன்னொரு காலத்தில் சிறுகதையும் தந்தாய்
சகலதும் தந்தே நீடூழி வெளிவருவாய்
சிறப்பாந்த வலம்புரியே வாழிய வாழியவே!

அரியாலையூர்-யசிதரன்

# வலம்புரி 24 ஆம் ஆண்டு நிறை

## தமிழ் மக்களின் விடிவெள்ளி



சைவத் தமிழ் மக்களின் கலை, கலாசார, ஆன்மிக, தொழில்நுட்ப மேம்பாட்டைத் தாரக மந்திரமாகக் கொண்டு வெளிவரும் பத்திரிகை வலம்புரியாகும். இருபத்து நான்கு ஆண்டுகளாக எத்தனையோ தடைகளையும் சவால்களையும் எதிர்கொண்டு பத்திரிகைத் துறையில் வீறுநடை போட்டு வருகின்றது.

எமது மக்களின் வாழ்வியல் மேம்பாட்டிற்குத் தேவையான செய்திகளையும் தகவல்களையும் உடனுக்குடன் பயனுறுதியுடன் வெளியிடும் தன்மை பாராட்டுதற்குரியது. சமயக் கட்டுரைகள், ஆன்மிகச் செய்திகள், நற்சிந்தனைகள் என்பவற்றைக் காத்திரமாக வாசகர்களுக்கு வழங்குவதில் வலம்புரி முன்னிலை வகிக்கும் பத்திரிகையாகும். தமிழ் மக்களின் தேவையறிந்து தகுந்த செய்திகளையும் தகவல்களையும் கட்டுரைகளையும் வழங்கி வருவது கண்கூடு.

ஆன்மிகம், மருத்துவம், அரசியல், கல்வி, வாழ்வியல் போக்குகள் தொடர்பாக பெறுமதியான கட்டுரைகளைத் தருவதில் நிகரற்ற பத்திரிகை.

சைவத் தமிழ் மக்களின் வாழ்வியல் மேம்பாடு குறித்தும் கலை, கலாசார, ஆன்மிக, ஒழுக்க, விழுமியங்கள் குறித்தும் செய்திகளைத் தொடர்ந்து மக்களுக்கு நிறைவாக வழங்கி வையகம் உள்ளவரை செழித்தோங்க ஆசி பகர்கின்றோம்.

"மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலகெல்லாம்"

**கலாநிதி.சிவஸ்ரீ.து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள்,**
**தலைவர்,**
**அகில இலங்கை இந்துக் குருமார் ஒன்றியம்.**

## கைவிடப்பட்டவர்களை தூக்கிவிடும் வலம்புரி



வலம்புரி நாளிதழை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். 25 ஆவது ஆண்டில் அடி எடுத்து வைக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் சரஸ்வதி தேவியின் திருவருள் துணையுடன் மென்மேலும் சிறந்து ஓங்க வாழ்த்தி ஆசீர்வதிக்கின்றேன்.

எனவே நீதியான, நேர்மையான, தர்மத்தின் குரலாக வெளிவருகின்ற வலம்புரி சூரிய-சந்திரர் இருக்கின்ற வரையில் நிலைத்து இருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஈழத்தமிழ் இனத்தின் இதயத் துடிப்பாக வெளிவருவது வலம்புரி நாளிதழ். தமிழர்களுடைய பிரதேசம், மொழி, கலைகலாசார விழுமியங்களை அடுத்த சந்ததியினருக்குப் பாதுகாத்துக் கொடுக்க வேண்டும் என்பதில் தளராது தர்மத்தின் வழி ஒழுகி தொண்டாற்றிக் கொண்டு இருக்கின்றது. அறத்தின் பால் நின்று இன ஒற்றுமையையும் மத ஒற்றுமையையும் பாதுகாப்பதில் தொண்டாற்றி வருகின்றது.

நீதி தவறுகின்ற எவராக இருந்தாலும் அவரைச் சுட்டிக்காட்டித் தகுந்தாற் போல் சரியான நிலைக்குக் கொண்டு வரும் வரையில் தன்னுடைய பணிகளை விடாமல் செய்து வெற்றி காண்பது வலம்புரியின் சிறப்பம்சமாகும். தமிழ் மக்களுடைய குறிப்பாகச் சைவசமயத்தினுடைய உயிர் நாடியாக வலம்புரி திகழ்கின்றது. இருந்தாலும் கூட எந்த வகையிலும் பிறமத இனத்தவர்களை எந்தச் சந்தர்ப்பத்திலும் குறை கூறாமல் அவர்களையும் அரவணைத்துச் செல்வதைப் பார்க்க முடிகின்றது.

வலம்புரியின் ஆசிரியர் தலையங்கத்தினை வாசிக்கத் தெரியாதபலர் வாசிக்கக் கேட்டு மகிழ்ந்ததை என்னுடைய கண்ணூடாகக் கண்டிருக்கின்றேன். அந்தளவிற்கு வலம்புரி ஆசிரியர் தலையங்கம் மக்களுடைய மனதிலே இடம்பிடித்து இருக்கின்றது.

வலம்புரியின், தர்மம் வழுவாத வெளியீடுகளினாலே மக்கள் விரும்பி நேசிக்கின்ற நாளிதழாக வெளிவந்து கொண்டு இருக்கின்றது. ஆரம்பித்த நாள் முதல் இன்றைய வரையில் அனைவராலும் பார்க்கப்படுகின்ற பகுதியாக ஆசிரியர் தலையங்கம் திகழ்கின்றது. "வலம்புரியின் சிறப்பு ஆசிரியர் தலையங்கம் எனலாம்." தர்மத்தின் குரலாக ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கின்ற வலம்புரிக் குடும்பத்தினை இந்த நல்லவேளையில் வாழ்த்தி ஆசீர்வதித்து நிறைவு செய்கிறேன்.

**சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள்,**
**குருமுதல்வர், வீணாகான குருபீடம்,**
**ஸ்ரீசரஸ்வதி அம்பாள் உபதேசத் திருக்கோவில்.**
**சண்டிலிப்பாய்.**



வ...
ஆம்...
நிறை...
ஆன...
ஒரு...
க...
கண...
யாகு...
காலப்பகுதியில் வலம்புரிப் பத்திரின...
இருந்தது?. அதன் வளர்ச்சிக்கு உ...
தந்தோர் யார்? என்பது எல்லா...
பயணித்தவர்களுக்கு மட்டுமே நன்...
மட்டும் உண்மை. இந்த 24 ஆண்...
பத்திரிகை பல சவால்களை...
சாதனைகளாக்கியுள்ளது. நாளொ...
மேனியுமாக வளர்ந்தே வந்து சரி...

ஒரு பத்திரிகையைத் தொடக்கு...
அதன் நிரந்தர இருப்பை உறுதிப்ப...
யாழ்ப்பாண மண் பெற்ற பெரு...
பத்திரிகைகள் அனைத்தும் சமய...
தொடர்ந்து வந்து கொண்டிருப்பதே...

வலம்புரிப் பத்திரிகையும் தொட...
அதன் அபிமானிகளின் விருப்பம...
விரும்பி வலம்புரிப் பத்திரிகை ...
வரலாறு படைக்க வேண்டுமென்று...

இந்தச் சாதனையைப் படைத்...
நர்கள், பிரதம ஆசிரியர் ந.விஜயசு...
செய்தியாளர்கள் மற்றும் ஊடகப்...
வலம்புரிப் பத்திரிகைக் குடும்பத்...
ஆண்டு நிறைவில் மகிழ்...
வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்...

**ஜஸ்ரின் பேனாட் ஞா...**



"...
உல...
செய...
மகா...
தமி...
தமி...
நிற...
மண்ணிலிருந்து தமிழ் பேசும் மக்...
ஒலித்துக் கொண்டிருக்கும் தமி...
வலம்புரியானது சமுத்திரம் போன்...
தகர்த்தெறிந்து தனது வெற்றிப் பயண...
புதியதோர் அத்தியாயமாகிய இ...
காலடிபதிப்பதை முன்னிட்டு மலரவு...
செய்தியை வழங்குவதையிட்டு ...
கின்றேன்.

கருத்துச் சுதந்திரமானது சனந...
அடிச்சுவடாகவும் அமைந்துள்ளது. ...
நாளிதழானது தமிழ்ச் சமுதாயத்...
நடத்தவும் அறிவு, ஆற்றல் ஆளுமை...
விழுமியங்களை அடியொற்றி தொ...
மென வாழ்த்தி நிற்கின்றேன்.

எனவே அனைத்துச் சமூகங்க...
மற்றும் சகவாழ்வை கட்டியெழுப்புவ...
நேர்மை மிகு பண்பு சுபீட்சம் மற்...
ஊக்குவித்து தமிழ் பேசும் மக்களின்...
தொடர்ந்தும் உதயம் பெற வேண...
துறையானது என்றும் ஊடக தர்ம...
தகவல்களை நடுநிலைமை தவறா...
சிதறடிக்காத வகையிலும் அகில...
படியினை எட்டிச் செல்ல எனது நல்...
சேவைக்காக தொடர்ந்து பயணி...
முாசிரியர் உள்ளிட்ட ஊடகவியலா...
நிறைந்த நன்றிகளையும் வாழ்த்து...
நிற்கின்றேன்.

அரசாங...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றைவு சிறப்பு மலர்- 20.12.2023



## யாழ். ஆயரின் வாழ்த்துச் செய்தி

வலம்புரிப் பத்திரிகை 2023 ஆம் ஆண்டில் 24 ஆண்டுகளை நிறைவு செய்து தனது 25ஆவது ஆண்டில் காலடிபதிக்கின்ற செய்தி ஒரு மகிழ்வான செய்தியாகும்.

கால் நூற்றாண்டு என்பது ஒரு கணிசமான ஆண்டு காலப்பகுதி யாகும். கடந்து வந்த 24 ஆண்டு

ப் பத்திரிகையின் பயணப்பாதை எப்படி
ச்சிக்கு உதவியோர் யார்?, உபத்திரவம்
து எல்லாம் அதனுடன் நெருங்கிப்
ட்டுமே நன்கு தெரியும். ஆனால் ஒன்று
24 ஆண்டு காலப்பகுதியில் வலம்புரிப்
ால்களைச் சந்தித்து அவற்றைச்
. நாளொரு வண்ணமும் பொழுதொரு
வந்து சரித்திரம் படைத்துள்ளது.

தொடக்குவது சாதனையல்ல. மாறாக
உறுதிப்படுத்துவதே சாதனையாகும்.
ற்ற பெருமை அதன் முதற் தமிழ்ப்
தும் சமயப்பத்திரிகைகளாகி இன்றும்
ாடிருப்பதேயாகும்.

யும் தொடர்ந்து வரவேண்டும் என்பதே
விருப்பமாகும். இதனையே நாமும்
திரிகை தொடர்ந்து வளர வேண்டும்.
ன்டுமென்று ஆசிக்கிறோம்.

ப் படைத்து நிற்கும் நிர்வாக இயக்கு
ந.விஜயசுந்தரம், உதவி ஆசிரியர்கள்,
ம் ஊடகப் பணியாளர்கள் அடங்கிய
குடும்பத்தினரை பாராட்டி 24ஆவது
மகிழ்வையும் இறையாசீர் மிக்க
ரிவிக்கின்றோம்.

**மேதகு கலாநிதி**
**ணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை,**
**யாழ். ஆயர்.**



## தர்மத்தின் குரல்

வலம்புரி நாளிதழ் தமிழ் மண்ணில் கால்பதித்து தர்மத்தின் குரலாக 24 ஆண்டுகள் நிறைவெய்தியிருக்கிறது. 25 ஆம் ஆண்டில் தன் பணியைத் தொடர்கிறது.

பல சிறப்பான அம்சங்களை வலம்புரி தாங்கி வருவது அதன் உயர்வுக்குக் காரணம். அதன் வெளியீட்டுக்குக் காரணமாகி உழைக்கின்ற அனைவருக்கும் எனது ஆசீர்வாதங்கள். மேலும் சிறப்புற வளர்ந்துவர இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**சிவாகம ஞான பாஸ்கரன்**
**சிவஸ்ரீ.தா.மகாதேவக்குருக்கள்**
**அதிபர், தர்மசாஸ்தா குருகுலம், காயத்ரீ பீடம்,**
**இணுவில், சுன்னாகம்.**



## வெற்றிநடைபோடுகின்ற வலம்புரி

வலம்புரி நாளேடு இருபத்தி நான்கு வருடங்களைப் பூர்த்தி செய்து விட்டது என்றறிந்து மிக்க மகிழ்ச்சியடைந்தேன். இலங்கையிலே பத்திரிகைகளுக்கு நீண்ட வரலாறுண்டு. 1841 ஆம் ஆண்டிலேயே அமெரிக்க மிஷனரிமார் "உதய தாரகை" பத்திரிகையை ஆரம்பித்து விட்டனர்.

அதனைத் தொடர்ந்து பல பத்திரிகைகள் புற்றீசல் போல் தோன்றி மறைந்து விட்டன.

இருபத்திநான்கு வருடங்களுக்கு முன்னர் இப்பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட பொழுது இந்தப் பத்திரிகை நிலைத்து நிற்குமா? என்று பலவாறு சிந்தித்தவர்களில் நானும் ஒருவன். ஆனாலும் 24 வருடங்களாக "வலம்புரி" தமிழ் மக்கள் வாழும் இடங்களிலெல்லாம் வெற்றிநடை போட்டு வருகின்றது.

தரமான அரசியல் கட்டுரைகள், உள்ளூர் செய்திகள், உலக நடப்புக்கள் என்பனவற்றை விரைவாகவும் தெளிவாகவும் பக்கச்சார்பின்றியும் கூறுவது அதன் பண்பு. ஜே.பார்ட்டன் என்ற அறிஞர், பத்திரிகைகள் தான் சாதாரண மக்களின் பல்கலைக்கழகங்கள். அவர்கள் அதற்கு மேல் ஒன்றும் படிப்பதில்லை என்றார்.

சிறந்த ஊடகவியலாளர்கள் வலம்புரியை நடத்துகின்றனர். அவர்களுக்கும் பத்திரிகையாசிரியர் விஜயசுந்தரத்திற்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பேராயர் கலாநிதி.எஸ்.ஜெபநேசன்.**



## தமிழ் மக்களின் தனித்துவமான பத்திரிகை

வலம்புரிப் பத்திரிகை வட பகுதித் தமிழ் மக்கள் மத்தியில் தனக்கெனத் தனியான ஒரு இடத்தைப் பெற்றுள்ளது.

வலம்புரிப் பத்திரிகை 24 ஆண்டுகளை நிறைவு செய்து 25ஆவது ஆண்டில் காலடிபதிக்கின்றது என்ற செய்தி நிச்சயமாக ஒரு மகிழ்வான செய்தியாகும். வலம்புரிப் பத்திரிகையின் முதல் ஆண்டில் இருந்து இன்றுவரை அதனோடு மிக நெருங்கிப் பயணிப்பதனால் அதன் பயணப்பாதையின் ஒவ்வொரு வளர்ச்சிப் படியையும் நான் நன்கு அறிந்து மகிழ்ந்து நிற்கிறேன். எந்தத் தங்குதடையுமின்றி வலம்புரிப் பத்திரிகை ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி தொடர்ந்தும் வளர இறையாசீர் மிக்க வாழ்த்துகளைத் தெரிவிக்கிறேன்.

கடந்த 24 ஆண்டு காலப்பயணத்தில் வலம்புரிப் பத்திரிகை வடபகுதித் தமிழ் மக்கள் மத்தியில் தனக்கெனத் தனியான ஒரு இடத்தைப் பெற்றுள்ளது என்பது பெருமையுடன் குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும். இதற்குப் பல காரணங்கள் உண்டு.

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ் என்ற தனது மகுட வாக்கை நடுநிலை தவறாது என்றும் எல்லோரிற்கும் சரியாகவும் பிரமாணிக்கத்துடன் பாதுகாத்து வருகின்றமை, ஊடக ஒழுக்கநெறிக் கோவையை மிகப் பிரமாணிக்கத்துடன் கடைப்பிடித்து சட்டத்தின் படியும் சம்பிரதாயங்களின் படியும் செயற்படுகின்றமை, எந்த ஒரு சட்டச்சிக்கலிலும் சிக்கிக் கொள்ளாது யாருக்காகவும் தன் கொள்கைகளையோ,கோட்பாடுகளையோ விட்டுக் கொடுக்காது மனச்சான்றின்படியும் நீதியின் படியும் பணியாற்றியமை, தனது பல்வடிவ ஆசிரியர் தலையங்கங்களால் பல விடயங்களை அலசி பலரின் கவனத்தைக் கவர்ந்து வசனாங்களுக்கிடையில் பல விடயங்களைப் புதைத்துப் பாடம் புகட்டி ஊடகத் துறையின் கருத்துருவாக்கப் பணிக்கு ஆசிரியர் தலையங்கத்தை முழுமையாகப் பயன்படுத்தியமை, செய்திகளை வெட்டொன்று துண்டு இரண்டாகத் தெளிவாக ஐயம் திரிபுற அறிக்கையிட்டு தெளிவாகச் செய்திகளை தெளிவுபடுத்தியமை என வரிசைப் படுத்திக் கொண்டே போகலாம்

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ் என்ற மகுட வாக்குடன் 25ஆவது ஆண்டில் வெற்றிநடை போடும் வலம்புரிப்பத்திரிகை தொடர்ந்து இன்னும் பல காலம் தமிழ் மக்களுக்கான தன் பணியை இன்னும் சிறப்பாக ஆற்ற- இன்றைய நவீன சவால்கள் மத்தியில் இனிதே தொடர இறையாசீர் வேண்டி வாழ்த்துகிறோம்.

**கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள்,**
**பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்,**
**பிசப் ஜஸ்ரின் மீடியா லைபிறறி அன்ட் மீடியா றீசேச் சென்ரர்.**



## வலம்புரி ஒரு வரலாற்றுச் சாதனை

வடமாகாணத்தின் வசந்த ருதுவாக மிளிரும் வலம்புரி நாளிதழ் 25 ஆம் அகவையில் கால்பதிக்கும் இந்நன்னாள் இலங்கை பத்திரிகை வரலாற்றில் ஒரு பொன் நாள். நடுவு நிலை தவறாத நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ் எனும் மகுட வாசகத்தின் கீழ் உண்மையான, சத்தியமான எத்தனையோ செய்திகளை எவ்விடர் வரினும், நிலை தவறாத நாளிதழாக வெளிவந்து கொண்டிருக்கும் வலம்புரியின் வரலாறே ஒரு வரலாற்றுச் சாதனை தான்.

யாழ். குடாநாட்டிலிருந்து எத்தனையோ போட்டிப் பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. கொழும்பிலிருந்து மாகாணப் பதிப்புகளாக அளவில் பெரியதும் அதிக பக்கங்களுடனும் நாளிதழ்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவற்றின் போட்டிகளுக்கிடையே தன் தனித்துவத்துடன் தன்னை நிலை நிறுத்தி அதிக விற்பனையை ஈட்டி தனித்து நிற்பது வலம்புரியின் தனித்துவமே.

வார இறுதி நாட்களில் சங்குநாதமாக இயம்பும் வெண்சங்கான வலம்புரி அரசியல் விடயங்கள், விமர்சனங்கள், சூடான செய்திகள், மாணவர் பக்கம், இராசி பலன்கள், விளையாட்டுச் செய்திகள், உலகச் செய்திகள், முகநூல் தரிசனம், கருத்துப்படங்கள் என பல்வேறுபட்ட நிகழ்ச்சி நிரலுடன் வாசகனுக்குத் தேவையான ஒவ்வொன்றிலும் தன் தடம்பதித்து முன்னேறிச் செல்லும் வலம்புரியின் தமிழ்ச் சேவை என்றென்றும் தொடரவும் பல்லாண்டு வாழவும் என் இதயபூர்வமான ஆசிகளைத் தெரிவிக்க வாய்த்த இச் சந்தர்ப்பத்திற்கு நன்றிகூறி வாழ்த்துகின்றேன்.

**வாழ்க பல்லாண்டு. வளர்க வலம்புரியின் தமிழ்த் தொண்டு.**

**சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் J.P.**
**பிரதம குரு வல்லை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில், ஆதீன கர்த்தர் தென்புலோலி புற்றளைச் சித்தி விநாயகர் தேவஸ்தானம்,**
**பீடாதிபதி, அகில உலகச் சைவக்குருமார் பேரவை.**



## தமிழ் மக்களின் தனிப்பெரும் குரல்

"தேமதுரத் தமிழோசை உலகெமலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" எனும் மகாகவியின் கூற்றுக்கிணங்க தமிழ் மொழியின் சிறப்பினையும் தமிழர் நம் இருப்பையும் நிலை நிறுத்துகின்ற நோக்கிலே ஈழ

பேசும் மக்களின் தனிப் பெருங்குரலாக
க்கும் தமிழ் நாளிதழ்களில் ஒன்றான
ரம் போன்ற ஆழமான பல தடைகளைத்
வற்றிப் பயணத்தில் பத்திரிகைத் துறையில்
மாகிய இருபத்து ஐந்தாவது ஆண்டில்
ட்டு மலரவுள்ள சிறப்பு மலரிற்கு வாழ்த்துச்
பதையிட்டு பெருமிதமும் பூரிப்புமடை

னது சனநாயகத்தின் அத்திவாரமாகவும்
ந்துள்ளது. இதன் பின்னணியில் வலம்புரி
சமுதாயத்தை நடுவுநிலையுடன் வழி
ல் ஆளுமையை வளர்த்திடவும் சனநாயக
யாற்றி தொடர்ந்தும் வெளிவர வேண்டு
றேன்.

ச் சமூகங்களின் மத்தியிலும் சமாதானம்
டியெழுப்புவதற்காக இந்நாட்டின் ஐக்கியம்,
பீட்சம் மற்றும் சமாதானம் என்பவற்றை
ம் மக்களின் மனதில் நீங்கா இடம் பிடித்து
பெற வேண்டுமெனவும் இப்பத்திரிகைத்
ஊடக தர்மத்தின் வழிநின்று உண்மைத்
மை தவறாது சமூகக் கட்டமைப்பினைச்
ும் அகிலமெங்கும் உரைத்து,வளர்ச்சிப்
எனது நல்லாசிகளை வழங்கி நிற்பதோடு
ந்து பயணிக்கும் முகாமையாளர், இத
டகவியலாளர் குழுவிற்கும் எனது மனம்
ம் வாழ்த்துக்களையும் அன்போடு வழங்கி

அ.உமாமகேஸ்வரன்,
அரசாங்க அதிபர், முல்லைத்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரி 24 ஆம் ஆண்டு நிறைவு சிறப்பு மலர்- 20.12.2023



## மக்கள் சேவையில் மாண்புறும் வலம்புரி

வலம்புரி தான் காலத்துக்குக் காலம் எதிர்கொண்ட பல இடர்பாடுகளைத் தாண்டி இன்று மக்கள் விரும்பும் நிலைபேறான பத்திரிகையாக இருக்கிறது. இப்பத்திரிகையின் எழுத்துக்கும் ஆசிரியர் தலையங்கங்களுக்கும் கருத்தியிலுக்கும் வாசகர் எண்ணிக்கையும் வாங்குவோர் தொகையும் விற்பனைப் பரப்பும் விளம்பர சேவையும் தொடர்ந்து அதிகரித்து வருவதைக் காணலாம். மேலும் வலம்புரி இன்று சிறந்த உட்கட்டமைப்பைக் கொண்ட தனது சொந்த அலுவலகத்தில் குடியேறியுள்ளதுடன் சிறந்த ஆளுமை மிக்க ஊடகத்துறையில் தேர்ச்சி பெற்ற பணியாளர்களையும் கொண்டுள்ளது. இது அதன் வளர்ச்சியையும் உறுதிப்பாட்டையும் காட்டுகின்றன.

இப்பத்திரிகை ஜனநாயகக் காவலனாகவும் ஒடுக்கப்பட்ட புறந்தள்ளப்பட்ட மக்களின் விடுதலைக் குரலாகவும்சமய, சமூக-சமுதாய உயர் விழுமியங்களை காப்பவனாகவும் தமிழ் மக்களை நெறிப்படுத்துவனாகவும் வலுப்படுத்துவனாகவும் சிறந்த ஊடகப் பணிகளைச் செய்கின்றது.

இப்பத்திரிகை பல்வகை வாசகர்களுக்கும் பொருத்தமான விடயங்களைத் தாங்கி வருவதும் அவை சிறந்த மொழிநடையில் இருப்பதும் வாசிப்பதற்கு இலகுவாக இருப்பதும் இதன் சிறப்பம்சமாகும்.

இப்பத்திரிகையும் இந்நிறுவனமும் மேலும் மேலும் வளர எனது இதயம் நிறைந்த வாழ்த்துகள்.

**வாழ்நாள் பேராசிரியர்**
**பொ.பாலசுந்தரம்பிள்ளை**phd (Durham)
**முன்னாள் துணைவேந்தர்.**



## குவலயம் ஓங்கச் செய்வாய்

கால் நூற்றாண்டு எம்மைக் கவர்ந்து நின்ற வலம்புரியே பாரதிதாசன் சொன்னதுபோல,

**"காரிருள் அகத்தில்**
**நல்ல கதிரொளி நீதான்"**
**இந்தப் பாரிடைத்**
**துயில் வோர் கண்ணிற்**
**பாய்ந்திடும் எழுச்சி நீதான்**
**ஊரினை நாட்ட இந்த உலகினை ஒன்று சேர்க்கப்**
**பேரறிவாளர் நெஞ்சிற் பிறந்த பெண்ணே.!**

**நீ இப்போது முதுகன்னியாகிவிட்டாய்.** புதுமனை யிலே புதிய பணிகளைச் செய்யத் தொடங்கிவிட்டாய். சின்னக் குழந்தையாய் உன்னைக் கண்டு நீ வளர வேண்டுமென நாம் வாழ்த்திய காலம் கடந்து போயிற்று. நீ இப்போது பணி செய்யும் காலம் வரலாற்றில் இடம்பெற வேண்டும். இதுவே எமது முதல் வாழ்த்து.

பொங்கும் இளமையைக் கண்டு பூரித்த நாம், உன் செயற்றிறன் கொண்ட முதுகன்னிப் பணி இன்னும் முன்னேற்றம் அடைய வாழ்த்துகிறோம். இது எமது இரண்டாவது வாழ்த்து. அடுத்து உன் தாய்மைப்பணி நீண்டகாலம் தொடர வேண்டும். "நல்ல மனிதர்களை உருவாக்குவோம்" என்ற இலக்கோடு உன் பணி உறுதியாக அமைய வாழ்த்துகிறோம். மீண்டும் பாரதிதாசன் குரலோடு இணைந்து கூறும் நிறைவான வாழ்த்து!

**அறிஞர்தம் இதய ஓடை**
**ஆழநீர் தன்னை மொண்டு**
**செறிதரும் மக்கள் எண்ணம்**
**செழித்திட ஊற்றி ஊற்றிக்**
**குறுகிய செயல்கள் தீர்த்துக்**
**குவயைம் ஓங்கச் செய்வாய்**
**நறுமண இதழ்ப்பெண்ணேஉன்**
**நலம் காணார் ஞாலம்காணார்.**

மீண்டுமொரு சிறப்பான வாழ்த்துக்கூறுகிறோம். உன் பணிதொடரட்டும். எம்கரங்களும் உன்னோடு இணையட்டும். இறைவன் எமக்கு நல்லருள் புரிவான்.

**"செய்யும் தொழிலே தெய்வம்"**

**வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ்,**
**முனைவர் ச. மனோன்மணி.**



## வலம்புரியின் செல்நெறியே அதன் வெற்றிக்குக் காரணம்

"நடுவுநிலை தவறா நன்நெறி காக்கும் நாளிதழ்.." என்பதை மகுட வாசகமாகச் சிரமேற் கொண்டு. நன்நெறி நின்று தன் நோக்கத்தை அடைவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவரும் "வலம்புரி" அதன் வெள்ளி விழா ஆண்டினுள் தடம்பதிக்கும் இந்நாளில் எனது வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொள்வதில் பூரிப்படைகிறேன். வலம்புரியும் அதன் வார இதழாகிய சங்குநாதமும் இன்னும் பல ஆண்டுகள் இதே வேகத்துடனும் மிடுக்குடனும் பயணிக்க வேண்டும் என வாழ்த்தி நிற்கிறேன்.

இந்து சமுத்திரத்தின் நித்திலம் என்று வர்ணிக்கப்படுகின்ற ஈழமணித் திருநாட்டின் சென்னியாகத் திகழ்கின்ற யாழ். மண்ணில் இருந்து தமிழுக்கும் சைவத்துக்கும் பெருந் தொண்டாற்றி. நன்நெறி நின்று வெளிவருகின்ற பத்திரிகை வலம்புரி என்றால் அது மிகையாகாது. சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதில் வலம்புரி பெரும் பங்காற்றி வருகிறது. யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளுள் வலம்புரியின் செல்நெறியே அதன் வெற்றிப் பயணத்துக்குக் காரணமாகும்.

யாழ்ப்பாணம் எனும் பிரதேசத்தைத் தாண்டி மாவட்டத்துக்கு வெளியே. வடக்கு மாகாணமெங்கும் மக்களின் விருப்பத்துக்குரியதொரு பத்திரிகையாக வலம்புரி விளங்குகின்றது. நான் அறிந்த வரையில் வலம்புரியின் செல்நெறியே மக்கள் வலம்புரியை விரும்பி வாசிப்பதற்குக் காரணமாகும்.

ஜனநாயகத்தின் நான்காவது தூண் என வர்ணிக்கப்படும் ஊடகத்துறையின் செல்நெறி. அதன் சமூகம் சார்ந்த பொறுப்பாண்மையைக் குறித்து நிற்கிறது. ஒரு சமூகத்தை வழிநடத்த வேண்டிய பொறுப்புணர்ந்து வலம்புரியின் ஆசிரிய பீடம் இருபத்தி நான்கு வருடங்களைச் செம்மையாகக் கடந்திருக்கிறது. சமூகத்துக்குத் தேவையான நன்னெறியைக் காட்டியிருக்கிறது. இந்தச் சீரிய பணியை ஆற்றிவருகின்ற வலம்புரியின் நிர்வாகிகள், பிரதம ஆசிரியர். ஆசிரியர் பீட அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்கள் அத்தனை பேருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வெள்ளி விழா ஆண்டு மட்டுமல்ல. இன்னும் பல தசாப்தங்களுக்கு வலம்புரி வெற்றிநடை போட எல்லாம் வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானின் நல்லருள் கிட்ட வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

**பேராசிரியர் சிறிசற்குணராஜா,**
**துணைவேந்தர்,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**



## பெறுமதி வாய்ந்த நாளிதழ்

ஒரு நாளிதழ் தொடர்ச்சியாக வெளிவந்து 24 ஆவது அகவையை அடைவது ஒரு பெரும் சாதனையாகும். பல்வேறு நெருக்கடிகளையும் சவால்களையும் சந்தித்த போதிலும் தனித்துவமான நாளிதழாகத் தன்னைத் தகவமைத்துக் கொள்வதில் வலம்புரி வெற்றி பெற்றுள்ளது என்றே கூறல் வேண்டும்.

அனைவரும் அறிந்து கொள்ளக்கூடிய வகையில் மிகவும் அரிதான.நூலுருவில் வெளிவராத. பயனுள்ள கட்டுரைத் தொடர்களைத் தொடர்ச்சியாக வலம்புரி வெளியிட்டு வருவது பாராட்டத்தக்கது. தனித்துவமான ஆசிரியர் தலையங்கங்களுக்கு ஊடாக மக்களது கருத்துக்களைப் பிரதிபலித்து வருவதும் ஆரோக்கியமானதே.

நூல்களைத் தேடிச் சென்று வாசித்து அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் குறைந்துள்ள இந்தக் காலகட்டத்தில் நூல்களைப் படிப்பதனூடாகப் பெறும்அறிவை வலம்புரி நாளிதழ் தனது கட்டுரைத் தொடர்களுக்கு ஊடாக வாசகர்களுக்கு வழங்கி வருகின்றமை மிகவும் பெறுமதி வாய்ந்ததாகும். இன்றைய நாள் இன்னொரு புதிய ஆண்டில் கால் பதிக்கும் வலம்புரி நாளிதழ் சிறப்பான ஊடகப் பணியாற்ற இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**மருத்துவர் த.சத்தியமூர்த்தி**
**பணிப்பாளர்,யாழ்.போதனா மருத்துவமனை**
**மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்,**
**வடமாகாணம்.**

## நெடிது வாழ்க!

நடுநிலை தவறா
நல்லிதழாய் நாம்
படுந்துயர் பலவும்
பகிர்ந்து மனதைத்
தொடும்விதம் ஆகத்
தலையங்கம் தந்தும்
நெடிது எங்கும் பரந்து வாழ்க!

**ப.மகேந்திரதாசன்,**
**நாயன்மார்கட்டு.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி
# 24 ஆம் ஆண்டு நிறைவு சிறப்பு மலர்- 20.12.2023

### தோற்காத பத்திரிகை

வாசகர்களைப் பூரண மனிதர்களாக்கவே
வலம் வருகின்றன ஊடகங்கள்.
'வலம்புரி' அதனைச் செவ்வனவே இங்கு
வரமாக்குகின்றது! வாழ்க வளர்க!
தோசமென எந்தமக்கு எது வந்தபோதும்
துணிந்து அதனைத் தட்டிக் கேட்பதில்
தூய பணி ஆற்றித் தேசமதை உய்விக்கும்
தோற்காத பத்திரிகை வலம்புரியே!
ஆசிரிய தலையங்கம், ஆலடிமாநாடு,
ஆங்கொலிக்கும் நாதம், அபிமன்யு, ஆதித்தன்,
அத்தனையும் பாங்காக ஓங்கிட வாழ்த்துக்கள்
ஆரோக்கியமாகப் பவனிவர ஆசிகள் உந்தமக்கு!

கே.எஸ்.சிவஞானராஜா

விடிகாலைவேளை உன்வரவே விடியலைத் தரும்
சித்தா றெஜிபோம் டிசைன்ஸ்




தொடர்புகளுக்கு
075 039 4357
075 544 5901
இல.49 A அச்சுக்கூட வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

மணியம் ஸ்ரோர்ஸ்
MANIUM STORES
நாளாந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள், சிங்கள ஆங்கில
கொழும்பு பத்திரிகைகள் மற்றும் பாடசாலை
உபகரணங்கள் காகிதாதிகள்




Kandy Road,
Chavakachcheri. (C-7935) Tel: 077 902 4275

T.சங்கரப்பிள்ளை அன் சன்ஸ்
சுப முகூர்த்த பட்டுப்புடவைகளுக்கு கைராசியான ஒரே நிறுவனம்



ஊர் போற்றும் வலம்புரியை
உளமார வாழ்த்துகின்றோம்

(C-7938)

- 40 வருட பாரம்பரியமுள்ள மொத்த சில்லறை விற்பனையாளர்.
- பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான சல்வார் வகைகள்.
- றொப், லெக்ஜீன்ஸ், பஞ்சாபி வகைகள். Party Frocks வகைகள்.
- ஆண்களுக்கான ஜீன்ஸ், சேட், ரீசேட், குர்தா வகைகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும்
- கொள்வனவு செய்ய நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கைக்குரிய கைராசியான ஒரே ஸ்தாபனம்.

T.SANGARAPPILLAI & SONS

21, Modern Market, Power House Road, Jaffna.

கிளை
பிரமாண்டமான காட்சியறை
225C ஆஸ்பத்திரி பின்பக்கம்
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
021 221 5397

Email :sangarappillaiandsons@gmail.com

எழியவர் விடிவுக்காய் உரத்து குரல் கொடுப்பவன் வலம்புரி
OLYMPIA SPORTS
Dealers in all kinds of sports Goods,
Band Items, Musical Instruments & Jersey



021 222 3490 / 077 806 0267
077 675 1646 / 077 533 5004
Olympiasportsjaffna@gmail.com (C-7936)
No.273, K.K.S Road, Jaffna.

சசிகா லேணர்ஸ் L
THE SASIKA LEARNERS
Reg.No DS-882
அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை
உரிமையாளர் தொடர்புக்கு: 0777 226 247 / 0776 140 361

தலைமைக்காரியாலயம்:
57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

யாழ் மத்தி (Town) T.P: 021 222 8004, 077 998 6247, 074 254 2264
கச்சேரி நல்லூர் வீதி (யாழ்ப்பாணம்) T.P: 021 221 7678, 077 434 3149, 077 990 5414
நெல்லியடி T.P: 021 226 0999, 077 261 2446
மல்லாகம் T.P: 021 224 3393, 077 343 6622
புன்னாலைக்கட்டுவன் T.P: 021 224 5001, 076 384 0684
பண்டத்தரிப்பு T.P: 021 225 2333, 077 434 3798
வேலணை T.P: 021 221 5472, 077 368 9319

வலம்புரியே
நீ வளமோடு
வாழ்க!
வாழ்க!




(C-7937)

(C-7608) sasikadrivingschool@gmail.com www.sasikalearners.com Sasika Learners

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரி 24 ஆம் ஆண்டு நிறைவு சிறப்பு மலர்- 20.12.2023


"வலம்புரிச் சங்கு எங்கும் ஓங்கி ஒலிக்கட்டும்"

**சேத்திரபாலா புத்தகசாலை**

(C-7945)



உள்ளூர், வெளியூர் தமிழ், ஆங்கில, சிங்களப் பத்திரிகைகள், காகிதாதிப் பொருட்கள், பாடசாலை உபகரணங்கள் என அனைத்தையும் எம்மிடம் மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**கண்டி வீதி, கொடிகாமம் சந்தி, கொடிகாமம்.**

"சங்குநாத ஒலி பாரெங்கும் ஒலியெழுப்பட்டும்"

**பூபாலசிங்கம் புத்தகசாலை**

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



அனைத்து விதமான நாளாந்த, வாராந்த, மாதாந்த பத்திரிகைகள் மற்றும் இதழ்களின் யாழ்ப்பாண முகவர் நிலையம்.
காகிதாதிகள், பாடசாலை உபகரணங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ள எம்மை நாடுங்கள்.

(C-7946)

தொடர்புகளுக்கு

**021 222 6693**

**பல ஆயிரம் கடந்த பதிவுகள்**

பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்

உங்கள் **கல்யாண மாலை**

சர்வதேச இலவச திருமண சேவையை உலகின் எப்பாகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள

**www.kalyanamalai.lk**
இணையத்தளத்தைப் பாருங்கள்

பதிவுக்கட்டணம் ரூபாய் 4,000/=



தொடர்புகளுக்கு :-
**கல்யாண மாலை**
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email : kalyanamalai.jaffna@gmail.com

உள்ளதை உள்ளபடி எழுதும் உத்தம வலம்புரி

**மதி கலர்ஸ்**
பிறிண்டேர்ஸ்

திருமண அழைப்பிதழ்கள் காட்சியறை



- Digital Printings
- Flex Banner
- Binding & Laminating
- Designing
- CTCP & Offset Printings

(C-7947)

**MATHI COLOURS PRINTERS**
Wedding Cards Showroom

021 2229285, 077 7222259
mathicolours@gmail.com
mathicolours
0702222259




விடிகாலைவேளை மரண ஓலங்களை விடுத்து மங்கல ஓசையுடன் மலரும் வலம்புரிக்கு வாழ்த்துக்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வலம்புரி
# 24 ஆம் ஆண்டு நிறைவு சிறப்பு மலர்- 20.12.2023


ஓடர் நகைகளை உத்தரவாதத்துடன்
அசல் 22 கரட் நகைகளைத் தெரிவு
செய்ய இன்றே நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்

பூரணி
நகை மாடம்
PURANE
JEWELLERS
தங்கப் பவுண்
நகை வியாபாரம்




(C-7939)
இல.46,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3121

நடுவு நிலை தவறாத நாமே வலம்புரி நாதம்
சிறீ மீனாட்சி நகை அகம்



Sree Meenakchi Nagai Aham
22 கரட் தங்கப்பவுண் நகை வியாபாரம்
22 KARAT GOLD JEWELLERY
T.P: 021 222 6109
இல. 177/B, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(C-7942)

விடிகாலை வேளை உன்வரவே விடியரைத் தரும்
சதாபொன்ஸ்
நிறுவனம்
கல்வி நிலையம்
(ஒழுக்கம் சார் கல்வி)
மாவிசந்தி, அல்வாய்.
(C-7940)
077 309 5176, 021 226 3206
076 126 0105

24 ஆவது அகவையை முன்னிட்டு எமது நல்வாழ்த்துக்கள்



மக்கள் நலம் பேணும் ஆரோக்கிய ஆலயம்
ரூபின்ஸ் வைத்தியசாலை (தனியார்) வரையறுக்கப்பட்டது
රුබින්ස් රෝහල (පෞද්ගලික) සීමාසහිත
RUHBINS HOSPITAL (PRIVATE) LIMITED

தற்காலத்திற் கேற்ப அனைத்து
நவீன மருத்துவ வசதிகளுடன்
24 மணி நேரமும்
சேவை வழங்கும்
" தூங்கா நிலையம்"




24 மணிநேர சேவைகள்
வெளிநோயாளர் பிரிவு (OPD)
அவசர சிகிச்சைப்பிரிவு (ETU)
சிறுநீர், இரத்தப் பரிசோதனைகள்
மருந்தக சேவை (Pharmacy)
ECG பரிசோதனை
நோயாளர் காவு ஊர்தி (Ambulance)

ஏனைய வசதிகள்
ஸ்கானிங் (Ultra Sound), ECHO
கதிர்ப்படப்பிரிவு (x-ray)
சத்திரசிகிச்சை பிரிவு (Operation Theatre)
நோயாளர் விடுதி வசதிகள் (Ward)

சகல துறைசார் வைத்திய நிபுணர்களின் சேவைகள்...
பொதுவைத்திய நிபுணர்கள், பொதுசத்திரசிகிச்சை நிபுணர்கள், நரம்பியல் வைத்திய நிபுணர்கள்,மகப்பேற்று வைத்திய நிபுணர்கள், எலும்புமுறிவுசத்திரசிகிச்சை நிபுணர்கள், தோல் வைத்திய நிபுணர்கள், கண்வைத்திய நிபுணர்கள்,காது,மூக்கு, தொண்டை வைத்திய நிபுணர்கள், பல்வைத்திய நிபுணர்கள், குழந்தை வைத்திய நிபுணர்கள்,இருதய வைத்திய நிபுணர்கள், உளநல வைத்திய நிபுணர்கள், கதிரியல் வைத்திய நிபுணர்கள்,நீரிழிவு அகம் சுரக்கும் தொகுதியியல் வைத்திய நிபுணர்கள், சுவாசப்பாதை நுரையிரல் வைத்திய நிபுணர்கள்,குடும்ப நலவைத்திய நிபுணர்கள், சிறுநீரக சத்திரசிகிச்சை நிபுணர்கள், பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை நிபுணர்கள்,மூட்டுவாத மற்றும் மீளமைப்பு நிபுணர்கள்,நரம்பியல் சத்திரசத்திரசிகிச்சை நிபுணர்கள்

மற்றும் சிறப்பு வைத்திய சேவைகளாக
குழந்தையின்மை நலசிகிச்சை, செயற்கை கருக்கட்டல் கருவளச்சிகிச்சை மற்றும் மகப்பேற்று பெண்ணியல் வைத்திய நிபுணத்துவ சேவை




(C-7941)

"மக்கள் சுகவாழ்வே எமது நிறுவனத்தின் இலக்கு"

160, பருத்தித்துறை வீதி, நெல்லியடி, யாழ்ப்பாணம், இலங்கை.
160, පේදුරුතුඩුව පාර, නෙල්ලියඩි, යාපනය, ශ්‍රී ලංකා.
160, Point Pedro Road - Nelliady, Jaffna - Sri Lanka.
+9421 226 1500 / +9421 492 7232
www.ruhbinshospitals.com
Ruhbins Hospital


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வான்பாயும் அக்கராயன் குளம்



(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தின் இரண்டாவது பெரிய குளமாகிய அக்கராயன்குளம் வான் பாய்ந்து கொண்டிருக்கின்றது. இவ்வாறு வான் பாய்கின்ற போது ஆண்டு தோறும் அக்கராயன் தாழ் பாலம் ஊடாக போக்குவரத்துகள் தடைப்படும் நிலையில் நிலைமை சீரா வதற்கு இரு நாட்கள் காத் திருக்க வேண்டிய நிலைமை காணப்படும்.

தற்போது ஸ்கந்தபுரம், கோணாவில் வீதி புனரமை க்கப்பட்டுள்ளதன் காரணமாக போக்குவரத்துகள் பாதிப் பில்லாமல் நடைபெறுகின்றது. எனினும் பொது மக்களை அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (5-350)

## சீரற்ற காலநிலையால்
# முல்லையில் 1,866 குடும்பங்களை சேர்ந்த 5,588 பேர் பாதிப்பு
### மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தகவல்

**(நெளுக்குளம்)**

**முல்லைத்தீவு மாவட்டத்தில் பெய்து வரும் மழை காரணமாக 1,866 குடும்பங்களைச் சேர்ந்த 5,588 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகா மைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.**

402 குடும்பங்களை சேர்ந்த 1189 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக் கப்பட்டுள்ளதாக நேற்று குறித்த பிரிவால் வெளியிடப்பட்ட தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் உள்ள அனைத்து குளங்களும் முற்று முழுதாக நிறைந்து அதிகள வில் வான் பாய்கின்ற நிலை மையில் பல்வேறு பகுதிகள் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இரணைமடு, முத்தை யன்கட்டு மற்றும் தண்ணி முறிப்பு குளத்தின் வான் கதவுக ளும் திறக்கப்பட்டு நீர் வெளியேற்றம் செய்யப்பட்டு கொண்டிருக்கின்றது. எனவே குளங்களின் கீழ் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இதேவேளை பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப் பட்டுள்ள மக்களுக்கு பிரதேச செயலாளர் அனர்த்த முகாமை த்துவ பிரிவு ஊழியர்கள், இரா ணுவத்தினர், கிராம அலு வலர்கள், கிராம மட்ட அமை ப்புகளின் பிரதிநிதிகள் உள் ளிட்டவர்கள் மக்களுக்கான சமைத்த உணவு மற்றும் அத்தியாவசிய தேவைகளை ஏற்பாடு செய்து வழங்கி வரு கின்றனர். (5-6)

## முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற விவசாய குழு கூட்டம்



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத் தின் நடப்பாண்டுக்கான இறுதி மாவட்ட விவசாய குழுக் கூட்டம் நேற்று மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் மாவட்ட செய லக பண்டாரவன்னியன் மாநாடு மண்டபத்தில் இடம் பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட த்தின் விவசாய துறைசார்ந்த பல்வேறு விடயங்கள் இக் கூட்டத்தில் முன்கொண்டு வர ப்பட்டு விரிவாக ஆராயப்பட்டன. மேலும் நீர்ப்பாசன குளங்க ளின் தற்போதைய நிலை மைகள், காலபோக பயிர்ச் செய்கை, துறை சார்ந்து தற் போது நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்ற திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாட ப்பட்டன.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் சி.குணபாலன், திட்டமிடல் பணிப்பாளர் க.ஜெயபவானி, முல்லைத்தீவு மாவட்ட நீர்ப்பா சன திணைக்கள உதவிப் பணிப்பாளர் விகிர்தன், மாவட்ட விவசாய பணிப்பாளர் ஜாமினி சுசீலன், திருநெல்வேலி ஆராய்ச்சி பிரிவின் உதவி பணிப்பாளர் விரிவுரையாளர் ராஜேஸ்கண்ணா, பிரதேச செயலாளர்கள், கமநல அபி விருத்தி திணைக்கள உத்தி யோகத்தர்கள், துறை சார்ந்த திணைக்கள அதிகாரிகள் மற் றும் விடயதான உத்தியோக த்தர்கள், விவசாய போதனா சிரியர்கள், விவசாய சம்மேள னங்களின் அங்கத்தவர்கள், மாவட்ட விவசாய பிரிவின் உத்தியோகத்தர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர். (6-299)

# முக்கொம்பனில் தொடர்ச்சியாக வெட்டப்படும் மரங்கள்
### உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி முக் கொம்பனில் இருந்து தொடர் ச்சியாக மரங்கள் வெட்டப்பட்டு வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுவதாக கிராம மக் கள் தெரிவித்துள்ளனர்.

பூநகரி பிரதேச செயலகத் தில் நடைபெற்ற கூட்டங்களில் முக்கொம்பன் கிராமத்தில் மர ங்கள் வெட்டப்பட்டு கொண்டு செல்லப்படுவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு இது வரை ஆக்கபூர்வமான நட வடிக்கைகள் எடுக்கப்பட வில்லை.

குறித்த விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடி க்கை எடுக்க வேண்டும் என கிராம மக்கள் தெரிவித்துள் ளனர். (6-350)



## 525 டைனமெட் குச்சிகளுடன் மன்னாரில் நபரொருவர் கைது



(மன்னார்)

மன்னார் புதிய மூர்வீதி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது ஒரு தொகுதி ஜெனட்னைட் (டைனமெட்) மற்றும் டெட் னேட்டர் குச்சிகளுடனும் நேற்று நபர் ஒருவர் மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரி வினரால் கைது செய்யப்பட்டு ள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் மன்னார் பள்ளிமுனை பிர தேசத்தைச் சேர்ந்த 48 வயதுடையவர் எனவும் அவ ரிடம் இருந்து 525 ஜெனட் னைட் (டைனமெட்) மற்றும் 354 டெட்னேட்டர்கள் குச்சிகள் உட்பட இனணப்பு நூல் 10 றோலும் மீட்கப்பட்டுள்ள தாகவும் பொலிஸார் தெரிவித்து ள்ளனர். (6-[illegible])

# சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட 4 டிப்பர்கள் பறிமுதல்



(தருமபுரம்)

விசுவமடு, கல்லாற்றுப் பகுதியில் தருமபுர பொலி ஸார் நடத்திய வீதிச் சோதனை நடவடிக்கையின் போது சட்ட விரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட நான்கு டிப்பர் வர்கனங்களும் அதன் சாரதிகள் நான்கு பேரும் கைது செய்யப்பட்டு ள்ளனர்.

நேற்று விசுவமடு பகுதி யிலிருந்து அனுமதிப்பத் திரத்திற்கு முரணான வகை யில் மணல் ஏற்றிச் செல்ல ப்பட்ட இரண்டு டிப்பர் வாக னங்களும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டதுடன் சாரதிகள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை நேற்று முன்தினம் கல்லாற்றுப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு நடை பெறுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய வீதிச் சோதனை நடவடிக்கையின் போது இர ண்டு டிப்பர் வாகனங்களும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டதுடன் அதன் சாரதிகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்குறித்த குற்றச் சாட்டில் பறிமுதல் செய்யப் பட்ட நான்கு டிப்பர் வாக னங்களையும் அதன் சார திகள் நால்வரையும் கிளி நொச்சி நீதிமன்றில் முற்ப டுத்த நடவடிக்கை எடுத்து ள்ளதாக தருமபுரம் பொலி ஸார் தெரிவித்தனர். (5-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தப்பித்தவறியும் நஞ்சுக்கிழங்கையும் நஞ்சானகிழங்கையும் உணவாக்காதீர்! அவதானம் தேவை!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

பொருளாதார சிக்கலுக்குள் நம் தேசமும் மக்களும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் மக்கள் தமது உணவுத் தேவையை பூர்த்தி செய்ய இயற்கையாக கிடைக்கின்ற பயிர்களை அவற்றின் பாகங்களை குறிப்பாக கிழங்கு வகைகளை தேடித்தேடி உணவாக்க முற்படுகின்றனர்.

முன்னைய காலத்தில் மக்களின் உணவுத் தேவையையும் குறிப்பாக ஊட்டச்சத்து தேவையையும் மண்ணில் தாமாக விளைந்து கிடைக்கும் கிழங்கு வகைகளும் இலைக் கறி வகைகளும் பூர்த்தி செய்திருக்கின்றன என்றால் மிகையாகாது. இக்கிழங்குகள் மண்ணினுள் குறிப்பிட்ட காலங்களில் தாமாக விளையும் போதும் பயிர்ச் செய்கையில் விளைவிக்கும் போதும் அவற்றை சரியான முறையில் தெரிவு செய்து உணவாக்கிக் கொள்ள வேண்டும்.

கலப்பைக் கிழங்கு (Gloriosasuperba) அநேகமாக வயற் பிரதேசங்கள் மற்றும் கவனிப்பாரற்று இருக்கின்ற இடங்களில் தெருவோரங்களில் தற்போது அதிகமாக காணப்படும். இதனது பூக்கள் மஞ்சள் சிவப்பு நிறங்களில் காணப்படும். இதனை காந்தள் மூலிகை எனவும் அழைப்பர். அதிகளவில் மருத்துவக் குணங்கொண்ட மூலிகைப் பயிராயினும் கலப்பைக் கிழங்கை எந்தக் காரணங்கொண்டும் உணவாக்கக் கூடாது. இது கொல்சிக்கேசியே எனும் குடும்பத் தாவரமாகும். இதனை கார்த்திகை மாதத்தில் அதிகம் காணக் கூடியதாக இருப்பதனால் கார்த்திகைப் பூ என்றும் சுடர்லில்லி அல்லது ஏறும் லில்லி என்றும் அழைப்பர்.

கார்த்திகைப் பூச்செடி நிலக்கீழ் கிழங்கு மூலம் அதிகளவில் இனப் பெருக்கமடையும். ஆனாலும் இதனது பூக்களில் மகரந்தச் சேர்க்கை செய்வதற்கு வண்ணத்துப் பூச்சிகளும் சன் பறவை எனப்படும் ஒருவகை பறவையும் வந்துசெல்லும். வண்ணத்துப் பூச்சிகளையும் சன் பறவையையும் கவர்வதற்கு இப் பூவிலுள்ள நிறம் மட்டும் முக்கியமானதல்ல. ஏனென்றால் பூச்சிகளால் சிவப்பு நிறத்தை இனங்காணமுடியாது.

ஆனால் மஞ்சள் நிறத்தை இலகுவாக இனங்காணமுடியும். மஞ்சள் நிறங்கொண்டநிறப் பொறிகளை வைத்து பூச்சிகளை கவர்வது பூச்சிகளை அவதானிக்கவும் கட்டுப்படுத்தவும் பயன்படுத்தப்படுகின்றது. மாறாக மகரந்த மணிகளும் பூவின் வெளிப்புறத்தில் காணப்படும். தாவரம் முழுக்க நச்சுத் தன்மை கொண்டதாகவே காணப்படும். இதனை உண்ணுகின்ற விலங்குகளும் மனிதர்களும் உயிர் தப்புவது கடினமாகவே இருக்கும் என கூறப்படுகின்றது. அப்படியாயின் பூவிற்கு வருகைதரும் பூச்சிகளும் பறவைகளும் நிறத்தை அடிப்படையாக வைத்தே கவர்ந்திழுக்கப்படுகின்றன. பூவினைஅவதானித்தால் கீழ்ப்புறமாக மகரந்த மணிகள் இருக்கும் பகுதியிலேயே மஞ்சள் நிறபுல்லி காணப்படும்.

கலப்பைக் கிழங்கினை தவறுதலாக மற்றைய கிழங்குகளுடன் சேர்த்தவித்து உண்ட பலர் நோய்வாய்ப்பட்டதும் சிலர் உயிரிழந்த செய்திகளும் ஏற்கனவே இக்கிழங்கின் நச்சுத்தன்மைபற்றி பறைசாற்றியிருக்கின்றன. இது தான் கலப்பைக் கிழங்கு என்று தெரியாமல் இதனை அவித்து உட்கொண்ட நிகழ்வுகளும் உண்டு. சென்றவாரமும் வடமராட்சி கிழக்கில் ஒருவர் உட்கொண்டு உயிரிழந்த செய்தியும் கிடைத்திருக்கின்றது.

இதனை உட்கொண்டவர் மூன்று நான்கு மணித்தியாலத்துக்குள்ளேயே வாய்ப்பகுதி இறுக்க்மாக காணப்படுவதும் வாந்தியெடுப்பதும் தொண்டைப்பகுதியில் எரிவு இருப்பதும் வயிறு நோவதும் இரத்தமாகமலம் கழிக்கப்படுவதும் அறி குறிகளாக கூறப்பட்டுள்ளன. இறுதியில் நீரிழப்புஏற்படுவதும் தவிர்க்க முடியாததாகிவிடும். எனவே தான் சரியாக கிழங்குகளை தெரிந்தெடுத்து உணவாக்கிக் கொள்ளவேண்டும்.

நம்பகத்தன்மையற்ற இனங்காண முடியாத கிழங்குகளை ஒதுக்கி விடுவதே சிறந்தது. எம்மவர்களுக்கு இதுபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது மிக அவசியமானதாகும். மேற்படி கிழங்கை தவறுதலாக உட்கொண்டவர்களை மேற்கூறிய அறிகுறிகளை இனங்கண்டதும் உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்வது அவர்களது உயிர்களை காப்பாற்ற உதவி செய்யும்.

நேரஞ் செல்லச் செல்ல உடலிலேற்படுகின்ற மாற்றங்கள் அவர் உயிர்பிழைப்பதற்கு ஏதுவாக இருக்காது என்பதனை கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

வழக்கமாக கிராமப்புறங்களில் மக்கள் இவ்வாறான கிழங்குகளை தேடி அகழ்ந்தெடுத்து அவற்றை அவித்து உண்ணுவார்கள். அவர்களுக்கு ஓரளவுக்கு நஞ்சுத் தன்மையான கிழங்குகள் உண்ணக் கூடியகிழங்குகள் பற்றி அறிவு உண்டு. அனுபவத்தின் மூலமும் அவர்கள் கிழங்குகளை தெரிவு செய்வார்கள்.

ஆனால் உண்பதற்கு உணவில்லை என கிடைக்கின்ற கிழங்குகளையோ அல்லது நஞ்சான உணவுகளையே உட்கொள்வதில் அறியாமையே மிஞ்சி நிற்கும். உயிரிழப்பைத் தடுக்க முடியாமலும் போய்விடும்.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



கலப்பைக் கிழங்கில் கொல்சிசின் என்னும் ஒருவகைநச்சுத்தன்மை உண்டு. இதனைவிட குறோறியோசின் எனப்படும் அல்கலோயிட்டும் காணப்படும். இந்த நஞ்சுகள் ஆபத்தானவை. ஆனால் அவற்றையும் பாரம்பரிய மருத்துவத்துறையில் பயன்படுத்துகின்றார்கள். கலப்பைக் கிழங்கு வத்தாளைக் கிழங்கு போலவும் உருவத்தில் காணப்படுவதனால் அவசியம் அதனை இனங்கண்டு தெரிந்தெடுத்தல் அவசியமானதாகும்.

மரவள்ளி, கருணை, சட்டிக் கரணை, வற்றாளை, மோதக வள்ளி, இராசவள்ளி,அறோறுாட்டு என பல கிழங்கு வகைகளை நாம் பயிரிட்டும் அறுவடை செய்தும் உணவாக பயன்படுத்தலாம். மரவள்ளிக்கிழங்கின் பாவனை தற்போது அதிகமாகியிருப்பதால் கிலோ நூற்றைம்பதற்கும் விலை தளம் பலடைந்தும் விற்கப்படுகின்றது.

அறுவடை செய்த மரவள்ளிக் கிழங்கை மறுநாளோ அதற்கும் மறுநாளோ வைத்திருந்து விற்பது நல்லதல்ல. அதனால் தேவையான மரவள்ளிக் கிழங்கினை அன்றையதினமே அறுவடை செய்து விற்பனைசெய்வது வாங்குபவர்களுக்கும் விற்பவர்களுக்கும் உகந்தாகும்.

தற்போது சந்தையில் மரவள்ளிக் கிழங்கின் வருகை அதிகரித்திருக்கின்றது. வெட்டுண்ட மரவள்ளிக் கிழங்கு நஞ்சூறியிருந்தால் அதனை பயன்பாட்டிலிருந்து தவிர்த்துக் கொள்வது அவசியமானதாகும். மரவள்ளிக் கிழங்கை அவதானமாக தோலகற்றி பயன்படுத்த வேண்டும். நஞ்சூறிய கிழங்கை பாதிவெட்டி பாதியை பயன்படுத்துவதனை தவிர்க்கவும். பலர் பாதிக்கப்பட்ட மரவள்ளிக் கிழங்கின் நஞ்சூறிய பகுதியை மட்டும் அகற்றிவிட்டு தெரிந்தெடுப்பார்கள். நஞ்சூறியதனை நாம் இலகுவில் இனங் காணலாம். வளையம் வளையமாக மரவள்ளிக் கிழங்கில் அவை காணப்படும். அநேகமான நேரங்களில் நஞ்சேறிய பகுதியில் நீலநிற வளையம் காணப்படும். மரவள்ளிக் கிழங்கை அவிக்கும் போது மூடி அவிக்கக் கூடாது எனவும் கூறப்பட்டுள்ளது. இதற்கும் மேலாக மரவள்ளிக் கிழங்கை இஞ்சியுடன் உண்ணக் கூடாது எனவும் அது ஒவ்வாத் தன்மையை ஏற்படுத்தும் எனவும் அறியப்படுகின்றது.

சட்டிக்கரணை மற்றும் கரணைக் கிழங்குகள் உணவாக பயன்படுத்தக் கூடியன என்றாலும் சிலருக்கு ஒவ்வாத் தன்மை ஏற்படுவதாகதகவல்கள் தெரிவிக்கின்றன. அவரவர் உடல் வாசிக்குத்தக்கதாக இவற்றைசமைத்து உணவாக உட்கொள்ளலாம். குறிப்பாக நஞ்சு கொண்ட கிழங்குகளை தவிர்ப்பது உயிர் ஆபத்துக்களை ஏற்படுவதை தவிர்க்கமுடியும்.

வீட்டுத் தோட்டங்களில் கிழங்குப் பயிர்களைநடுகை செய்து அன்றாடம் தமதுதேவைகளுக்கு பயன்படுத்துவதே சிறந்தது. மரவள்ளி, வத்தாளை, கருணை, சட்டிக்கரணை, மோதகவள்ளி மற்றும் இராசவள்ளிஎன்பன வீட்டுத் தோட்டங்களில் இலகு வாக பயிரிடலாம்.

பொதுவெளியில் வளர்ந்திருக்கின்றது என்ற நம்பிக்கையில் தவறான கிழங்குகளை அறுவடை செய்து உணவாக பயன்படுத்துவதை தவிர்ப்பது என்றும் நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 358





இருபத்தைந்தாம் அத்தியாயம் மாதோட்ட மாநகரம்

நமது கதாநாயகன் வந்தியத்தேவனை நாம் விட்டுப் பிரிந்து நெடுங்காலம் ஆகிவிட்டது. தஞ்சையிலேயே அதிக நாள் தங்கி விட்டோம். சில நாள் தான் என்றாலும் நெடுங்காலமாகத் தோன்றுகிறது. இந்தச் சில நாளைக்குள் வந்தியத்தேவன் ஈழத்துக் கடற்கரையோடு நடந்து சென்று பாலாவி நதிக் கரையில் இருந்த மாதோட்ட மாநகரை அடைந்திருந்தான். இராமேசுவரக் கடலுக்கு அப்புறத்தில் ஈழ நாட்டுக் கடற்கரையில் இருந்த அம்மாநகரம், திருஞானசம்பந்தர் காலத்திலும், சுந்தர மூர்த்தியின் காலத்திலும் இருந்ததுபோலவே இப்போது பசுமையான மரங்கள் அடர்ந்த சோலைகளினால் சூழப்பட்டுக் கண்ணுக்கு இனிய காட்சி அளித்தது. மாவும், பலாவும், தென்னையும், கமுகும், கதலியும், கரும்பும் அந்தக் கரையைச் சுற்றிலும் செழித்து வளர்ந்திருந்தன. அந்த மரங்களில் வானரங்கள் ஊஞ்சலாடின. வரிவண்டுகள் பண்ணிசைத்தன பைங்கிளிகள் மழலை பேசின.

அந்நகரின் கோட்டை மதில்களின் மேல் கடல் அலைகள் மோதிச் சலசலவென்று சப்தம் உண்டாக்கின. மாதோட்ட நகரின் துறைமுகத்தின் பெரிய மரக்கலங்கள் முதல் சிறிய படகுகள் வரையில் நெருங்கி நின்றன. அவற்றிலிருந்து இறக்கப்பட்ட பண்டங்கள் மலை மலையாகக் குவிந்துகிடந்தன. இவையெல்லாம் சம்பந்தர் சுந்தரர் காலத்தில் இருந்தது போலவே இருந்தாலும் வேறு சில மாறுதல்கள் காணப்பட்டன. மாதோட்ட நகரின் வீதிகளில் இப்போது கேதீசுவர ஆலயத்துக்குச் செல்லும் அடியார்களின் கூட்டத்தை அதிகம் காணவில்லை. பக்தர்கள் இறைவனைப் பாடிப் பரவசமடைந்த இடங்களிலெல்லாம் இப்போது போர் வீரர்கள் காணப்பட்டனர். கத்தியும் கேடயமும், வாளும் வேலும், கையில் கொண்ட வீரர்கள் அங்கு மிங்கும் திரிந்தார்கள்.

சென்ற நூறு ஆண்டுகளுக்கு அதிகமாக அந்த நகரம் ஒரு யுத்த கேந்திரஸ்தலமாக விளங்கி வந்தது. தமிழ்நாட்டிலிருந்து ஈழத்துப் போருக்கு வந்த படைகள் பெரும்பாலும் அங்கேதான் இறங்கின. திரும்பிச் சென்ற படைகளும் அங்கேதான் கப்பல் ஏறின. நகரம் பல தடவை கைமாறிவிட்டது. சில சமயம் இலங்கை மன்னர்களிடமும், சில சமயம் பாண்டிய அரசர்களிடமும் அது இருந்தது. பராந்தக சக்கரவர்த்தியின் காலத்திலிருந்து சோழர்களின் ஆதிக்கத்தில் இருந்து வந்தது.

அத்தகைய யுத்த கேந்திர நகரத்தின் கோட்டை மதில் வாசலில் ஒரு நாள் வந்தியத்தேவன் வந்து நின்றான். நகருக்குள் போக வேண்டும் என்றான். சோழ சேநாதிபதியைப் பார்க்க வேண்டும் என்றான். காவலர்கள் அவனை உள்ளே விட மறுத்தார்கள். அதன் பேரில், முன்னர் கடம்பூரில் கையாண்ட யுக்தியை இங்கும் அவன் கையாண்டான். காவலர்களைப் பலவந்தமாகத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழையப் பிரயத்தனம் செய்தான். காவலர்கள் அவனைச் சிறைப் பிடித்துக் கோட்டைத் தலைவனிடம் கொண்டு போனார்கள். வந்தியத்தேவன் கோட்டைத் தலைவனிடம் இளவரசர் அருள்மொழிவர்மருக்கு முக்கியமான ஓலை கொண்டு வந்திருப்பதாகவும், அதைப் பற்றி சோழ சேநாதிபதியிடந்தான் விவரம் சொல்ல முடியும் என்று கூறினான். அவனைப் பரிசோதித்துப் பார்த்தார்கள். 'பொன்னியின் செல்வ'னுக்கு ஓர் ஓலையும், பழுவூர் பனை இலச்சினையும் அவனிடம் இருக்கக் கண்டார்கள்.

கொடும்பாளூர்ப் பெரிய வேளார்பூதி விக்கிரம கேசரி அச்சமயம்இலங்கைப் படையின் சேநாதிபதியாக இருந்தார். (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## திருடனைக் கண்டுபிடிப்பது எப்படி?

அக்பர் ஒரு நாள் பீர்பாலுடன் தோட்டத்தில் உலவிக் கொண்டு இருந்தார். திடீரென அக்பர் தன் வலது கைமணிக்கட்டை இடது கையால் அழுத்தித் தேய்க்க ஆரம்பித்தார். அவருடைய மணிக்கட்டு வீங்கியிருந்தது. அதைப் பார்த்த பீர்பால் சிரித்தார்.

"நான் வலியால் துடிக்கையில் உனக்கு சிரிக்கத் தோன்றுகிறதா?" என்று அக்பர்.

"மன்னிக்கவும் பிரபு! நான் ஏன் சிரித்தேன் என்று சொல்கிறேன்" என்ற பீர்பால் தோட்டத்திலிருந்த எலுமிச்சைச் செடிகளிலிருந்து ஒரு பழம் பறித்து வந்து அதை வெட்டி, அதன் சாறை வீக்கத்தில் தடவித் தேய்த்தார். வலி சற்றுக் குறைந்தாற்போல் போல் தோன்ற, அக்பர் "எலுமிச்சைச் சாறை குளவிக் கொட்டின இடத்தில் தடவினால் வலி குறையும் என்பது இன்றுதான் புரிந்தது" என்றார்.



"உங்களுக்கு அந்த உண்மை இன்று புரிந்தது. எனக்கு இன்று மற்றொரு உண்மை புரிந்தது. அதனால்தான் சிரித்தேன்" என்றார் பீர்பால். "அது என்ன?" என்று அக்பர் கேட்டார்.

"பிரபு! உங்களைக் கண்டு நாங்கள் அனைவரும் பய, பக்தியுடன் மரியாதை செய்கிறோம். ஆனால் ஒரு அற்பக் குளவி தைரியமாக உங்களிடம் பறந்து வந்து உங்களைக் கொட்டி விட்டு சென்று விட்டதே! அதை நினைத்துத் தான் சிரித்தேன்" என்றார் பீர்பால்.

"நீ சொல்வது உண்மை தான்! என்னுடைய அதிகாரம் மனிதர்களிடம்தான் செல்லும். குளவி, வண்டு, எறும்பு ஆகிய சிறிய ஜீவராசிகள் கூட என்னைக் கண்டு பயப்படுவதில்லை. ஏனெனில் அவை தங்களுக்கு ஏதாவது ஆபத்து என்று தோன்றினால் மட்டுமே தங்கள் தற்காப்புக்காக சண்டையிடுகின்றன. ஆனால் மனிதன் மட்டுமே ஆசை, பொறாமை, கோபம் ஆகிய உணர்ச்சிகளால் தூண்டப்பட்டு, மற்றவர்களைத் துன்புறுத்துகிறான். அவ்வாறு குற்றமிழைப்பர்களை தண்டிப்பதுதான் என் கடமை?" என்றார்.

அவ்வாறு உரையாடிக் கொண்டே தோட்டத்தின் சிறிய கதவருகே வந்தனர். பிறகு கதவைத் திறந்து கொண்டு அரண்மனைக்குச் செல்ல நினைக்கையில் கதவருகே ஒரு பொற்கொல்லன் நின்று கொண்டு இருந்தான். அக்பரைக் கண்டதும் பணிவுடன் வணங்கினான்.

"யார் நீ?" என்றார் அக்பர்.

"நான் பொற்கொல்லன் பஜ்ரிதாஸ்!" என்றான் அவன்.

"உனக்கு என்ன வேண்டும்?" என்று அக்பர் கேட்டார்.

"ஐயா, என் வேலைக்குத் தேவையான அனைத்துத் தங்கத்தையும் ஓர் இரும்பு அலுமாரியில் பத்திரமாக வைத்திருப்பது என் வழக்கம்! பூட்டியிருக்கும் அந்த அலமாரியின் சாவி என்னிடம்தான் இருக்கும்.

நான் வேலையில் மும்முரமாக இருந்தால், என் பணியாளர்கள் நால்வரில் ஒருவனை அனுப்பி, அலுமாரிப் பூட்டைத் திறந்துத் தங்கத்தை எடுத்து வரச் சொல்வேன்.

என்னுடைய நான்கு பணியாளர்களும் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள்" என்றான்.

"சரிதான்! அப்படியிருந்தும் உன்னுடைய அலுமாரியிலிருந்து தங்கம் திருட்டுப் போய் விட்டதாக்கும்! உன் பணியாளர்களில் ஒருவன்தான் அதைத் திருடியிருக்க வேண்டும். அப்படித் தானே?" என்றார் அக்பர்.

"ஆம் பிரபு!" என்றான் பஜ்ரிதாஸ்.

"திருட்டுப் போனத் தங்கத்தின் மதிப்பு என்ன?" என்று அக்பர் கேட்டார்.

"பத்து தங்கக் கட்டிகள்! அவற்றின் விலை ஒரு லட்சத்திற்கும் மேல்!" என்றான் பஜ்ரிதாஸ்.

"கவலைப்படாதே! மூன்றே நாளில் உன் தங்கம் உனக்குத் திரும்பிக் கிடைத்து விடும்" என்று சொல்லிவிட்டு அக்பர் நகர்ந்தார். "பிரபு? குற்றவாளியைக் கண்டு பிடிக்கும் பொறுப்பை யாரிடம் தரப் போகிறீர்கள்?" என்று பீரபால் கேட்டார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப்பதில் இருந்துதான் வலிமை எல்லாம் கிடைக்கிறது.

*– காந்திஜி*

வலம்புரி
TP: 021 222 3378
website : www:valampurii:lk

## நீதிநெறி வழுவாத உங்களால் வளர்க்கப்பட்ட வலம்புரி...

என்றும் எங்கள் மீது அன்பும் பாசமும் கொண்ட அன்புக்குரிய வாசகப் பெருமக்களே!

நீங்கள் மார் மீதும் தோள் மீதும் தூக்கி வளர்த்த உங்கள் பிள்ளைக்கு அகவை 24.

பெற்றவர்கள் நாமாக இருந்தாலும் அதை வளர்த்தவர்கள் நீங்கள். ஆகையால் உங்கள் பிள்ளைக்கு அகவை 24 என்பது உங்களை நிச்சயம் பூரிப்படைய வைக்கும்.

ஆம், வலம்புரியின் 24ஆவது அகவை நிறைவின் பூரிப்பை உங்களோடு பகிர்ந்து கொள்வதைவிட, வேறு எதுவும் எமக்குப் பெரிதல்ல.

அன்று கம்சனுடைய சிறையில் குழந்தை கண்ணனை தாய் தேவகி பிரசவிக்கின்றாள்.

எட்டாவது ஆண் குழந்தை தன்னை அழிக்கும் என்ற சோதிடர்களின் கணிப்பால் கடுப்படைந்த கம்சன் தேவகிக்குப் பிறக்கின்ற எட்டாவது ஆண் குழந்தையைக் கொல்வதற்காகவே அவர்களைச் சிறையில் அடைத்திருந்தான்.

வலம்புரி சங்கை ஏந்தும் குழந்தை பிறக்கின்றது. எப்படியும் அந்தக் குழந்தையைக் காப்பாற்றவேண்டுமெனத் தந்தை வாசுதேவர் முடிவு செய்கிறார்.

குழந்தையை தூக்கியபடி பூட்டியிருக்கும் சிறைக் கதவை நெருங்குகிறார்.

என்னே! அதிசயம் சிறைக்கதவுகள் தானாகத் திறக்கின்றன. வெளியில் பெரு வெள்ளம், ஆறு பாய்ந்தோடுகிறது. ஆற்றைக் கடந்தால் மட்டுமே கம்சன் எனும் கொடியவனிடம் இருந்து குழந்தை கண்ணனைக் காப்பாற்ற முடியும்.

பிரப்பங்கூடையில் குழந்தையை வைத்து தன் தலையில் சுமக்கிறார் வாசுதேவர்.

குழந்தைக்கு மழை நீர் கொட்டாமல் இருக்க ஆதிசேடன் எனும் நாகம் தன் ஐந்து தலைகளையும் விரித்து குடை பிடிக்கிறது.

ஆற்று நீர் விலகிப் பாதை விடுகிறது. நீலவண்ணக் குழந்தை கண்ணன் கோகுலத்தில் பாதுகாப்பாக விடப்பட அங்கு ஆயர்பாடிப் பெண்கள் குழந்தை கண்ணனை வளர்த்தெடுக்கின்றனர். இது நீங்கள் அறிந்த புராணக்கதை.

அந்தக் கதைக்கும் கண்ண பரமாத்மாவின் கையில் இருக்கின்ற தர்மத்தின் அடையாளமான வலம்புரிச் சங்கின் நாமத்தைத் தாங்கிய உங்கள் பிள்ளைக்கும் தொடர்பு உண்டு.

அந்தத் தொடர்பு பெயரளவில் மட்டுமல்ல. பாதுகாக்கப்பட்ட முறையிலும்தான்.

ஆம், வலம்புரி குழந்தையின் அவதரிப்பு சிலருக்கு வெறுப்பையும் கோபத்தையும் கொடுத்தது.

குழந்தைப் பருவத்திலேயே அதன் மூச்சை நிறுத்த கம்சர்கள் வியூகம் அமைத்தனர். என்ன செய்வது நீங்கள் வலம்புரிக் குழந்தையைக் கையில் ஏந்தி எடுத்தீர்கள். பாலூட்டி சீராட்டி வளர்த்தீர்கள்.

அந்தக் குழந்தை உங்கள் கரங்களை விட்டகலாமல் வளர்ந்து இன்று அகவை இருபத்து நான்கை நிறைவு செய்து 25 ஆவது அகவையில் காலடி வைக்கிறது.

இந்த இனிமையான நேரத்தில் நீதி வழுவா உங்கள் தர்மத்தால் பாதுகாக்கப்பட்ட வலம்புரி அறத்தின் வழிநின்று என்றும் தர்மத்துக்காகக் குரல் கொடுக்கும் என்பதை சத்தியம் செய்து இறைவனின் துணையோடும் உங்களின் ஆசியோடும் பணி தொடர்கிறோம்.

# முழுமையான காலநிலை அனர்த்த முன் எச்சரிக்கைப் பிரிவு அறிமுகம்

(கொழும்பு)

அனர்த்தங்கள் தொடர்பான முன் எச்சரிக்கை பொறிமுறையை மேலும் பலப்படுத்துவதன் ஊடாக இலங்கை மக்களின் வாழ்க்கையை மேலும் பாதுகாக்கும் விதமாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம், இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் SLT Mobitel, Hutch, Dialog, Airtel உள்ளிட்ட தொலைபேசி நிறுவனங்கள் இணைந்து முழுமையான அனர்த்த முன் எச்சரிக்கைப் பொறிமுறையொன்றை வெளியிடுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர்நாயகம்மேஜர் ஜெனரல் (ஓய்வு) எஸ்.ரணசிங்க, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர்நாயகம்டீ.எம்.எம்.திசாநாயக்க ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

மேற்படி கைத்தொலைபேசிகளுக்கான செயலியை தேசிய பாதுகாப்பு தினமான 2024 டிசம்பர் 26 ஆம் திகதி வெளியிட எதிர்பார்க்கப்படுகிறது.

வானிலை மற்றும் காலநிலை அனர்த்தங்கள் மற்றும் ஏனைய காரணிகளால் ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் தொடர்பில் உரிய முன் எச்சரிக்கையுடன் செயற்படும்பட்சத்தில், அதனால் ஏற்படக்கூடிய உயிர்ச் சேதங்களைக் குறைக்க முடியும். அதற்கமைய புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தொலைபேசி சேவைகள் வாயிலாக முழுமையான முன் எச்சரிக்கைகளை வழங்க முடியும்.

அதற்கமைய சுனாமி எச்சரிக்கை நடவடிக்கைகளைப் பலப்படுத்தும் நோக்கில் இந்தப் பொறிமுறை அறிமுகப்படுத்தப்பட உள்ளதோடு, அனர்த்த முகாமைத்துவப் பொறிமுறைக்குள் நாட்டின் 14 மாவட்டங்களில் சுனாமி அச்சுறுத்தலுக்கு முகம்கொடுக்கக் கூடியவர்கள் என அறியப்பட்ட சுமார் 60,000 பேருக்கு "Ring Tone" முறையிலான ஒலியுடன் கூடிய முன் எச்சரிக்கை செய்தியொன்றை அனுப்ப எதிர்பார்க்கப்படுகிறது.

அதற்காக இரவுவேளைகளில் சயிரன் ஒலியுடன் கூடிய முன் எச்சரிக்கை பொறிமுறையொன்று உருவாக்கப்படும்.

மேற்படித் திட்டத்தை மேலும் விரிவுபடுத்தும் வகையில் மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு பாதிப்புக்கள் தொடர்பிலான முன் எச்சரிக்கைகளையும் இதனூடாக வழங்குவதால் முழுமையான முன் எச்சரிக்கை பொறிமுறையொன்றை முன்னெடுத்துச் செல்ல எதிர்பார்க்கப்படுகிறது. (ம-7)

மாவீரர் துயிலும் இல்லத்தில் அஞ்சலி

# பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைதான நால்வர் பிணையில் விடுதலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவீரர் துயிலும் இல்லத்தில் அஞ்சலி நிகழ்வுகளில் கலந்து கொண்டதற்காக கைது செய்யப்பட்ட உயர்தரப்பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவன் உட்பட நான்கு பேர் நேற்று பிணையில் விடுக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 27ஆம் திகதி மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்று முடிந்த நிலையில் அதனை ஒருங்கிணைத்தவர் மற்றும் உயர்தரம் பயிலும் மாணவன் என நால்வர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மீது பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வாழைச்சேனை பொலிஸாரினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதியை சந்தித்த பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சாணக்கியன் ஆகியோர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களை விடுதலைசெய்யுமாறு வலியுறுத்தியிருந்தனர்.

இதனடிப்படையில் மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் இவர்களின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளருடன் கலந்துரையாடியிருந்த நிலையில் நேற்று முன்தினம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைய நேற்று பிணையில் விடுக்கப்பட்டுள்ளனர். (ம-7)

# மலையக தொடருந்து சேவைகள் பாதிப்பு

(கொழும்பு)

ஹப்புத்தளை மற்றும் தியத்தலாவை ஆகிய தொடருந்து நிலையங்களுக்கு இடைப்பட்ட 155 1/4 எனும் மைல்கல் பகுதியில் நேற்று அதிகாலை ஏற்பட்ட பாரிய மண்சரிவு காரணமாக மலையக தொடருந்து சேவைகள் பாதிப்படைந்துள்ளன.

பாதிப்பேற்பட்டுள்ள தொடருந்து பாதையை சீர்செய்யும் பணிகளில் தொடருந்து நிலைய ஊழியர்களும், தியத்தலாவ இராணுவத்தினரும் ஈடுபட்டுள்ளனர்.

மண்சரிவு காரணமாக மலையக தொடருந்து பாதையின் ஊடான சேவைகள் தாமதமாகலாம் என தொடருந்து நிலைய கட்டுப்பாட்டு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக கொழும்பிலிருந்து பதுளை நோக்கி பயணித்த இரவு நேர தபால் தொடருந்து ஹப்புத்தளையில் நிறுத்தப்பட்டது.

இதேவேளை, தொடருந்து பாதை தடைப்பட்டுள்ளதால் உடரட்ட மெனிக்கே தொடருந்தும், பொடிமெனிகே தொடருந்தும் காலதாமதமாக இயக்கப்படும் என தொடருந்து திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, காலை 5.45 மணிக்கு பதுளையில் இருந்து கோட்டை வரை இயக்கப்பட வேண்டிய உடரட்ட மெனிக்கே தொடருந்து இது வரை புறப்படாமல் உள்ளது.

அத்துடன், காலை 8.30 மணிக்கு கொழும்பு நோக்கிச் செல்லவிருந்த பொடிமெனிகே தொடருந்தும் சில மணித்தியாலங்கள் தாமதமாகப் புறப்படும் என அறிவிக்கப்பட்டது.

பாரிய மண்சரிவு என்பதன் காரணமாக சீர்செய்யும் பணிகளில் தாமதம் ஏற்படுவதாக இராணுவத்தினர் தெரிவித்தனர். (ம-7)

# மது போதையில் ஆட்டோ செலுத்திய பெண்ணால் பரபரப்பு

(கண்டி)

கண்டியில் மதுபோதையில் முச்சக்கரவண்டியை செலுத்தி பெண் ஒருவர் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

கண்டி ஏ 26 மஹியங்கனை வீதியில் மதுபோதையில் முச்சக்கரவண்டியை செலுத்திச் சென்ற பெண்ணொருவரை போக்குவரத்து பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தெல்தெனிய வாகலை பிரதேசத்தை சேர்ந்த 33 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகிறது.

தெல்தெனிய மாவட்ட ஆரம்ப வைத்தியசாலையில் இருந்து அவருக்கான செவிப்புலன் தொடர்பில் அறிக்கையையும் பெற்றுக்கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் தெல்தெனிய நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில்** ஓமினி அலுமினியம் தொழிற்சாலை-கரந்தன், அரசகேசரி பிள்ளையார் கோவிலடி நீர்வேலி, கரந்தன், மாலை வைரபர் கோவிலடி, போயிட்டி, பொக்கணை, ஊரெழு அம்மன் கோவில், சில்லாலை முதியோர் இல்லம், சாந்தை சில்லாலை பண்டத்தரிப்பு, ஜம்புகோளப்பட்டினம், ஓய்வு விடுதி-மாதகல், ஜம்புகோளப்பட்டினம், காஞ்சிபுரம், மாதகல்,காட்டுப்புலம்,குசுமாந்துறை, மாதகல் இறங்குதுறை, பண்டத்தரிப்பு ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலும் புதிய ஊழல் தடுப்புச் சட்டமும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?

18

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



(ஊ) இலஞ்சம், ஊழல், சொத்துக்களும் பொறுப்புக்களும் தொடர்பான தவறுகள் மற்றும் இணைந்த தவறுகள் என்பனபற்றிப் பூர்வாங்க விசாரணைகளையும் புலனாய்வுகளையும் நடத்துவதற்கும் அவற்றுக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுப்பதற்கும் சொல்லப்பட்ட ஆணைக்குழுவுக்குப் பணிப்பாணை விடுத்தல்

(எ) இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுத்தல் பற்றிக் கல்விசார் செயற்பாடுகளை நடத்துதலும் ஒருங்கிணைத்தலும்

(ஏ) பகிரங்க உத்தியோகத்தர்கள் கள்ளமானமுறையில் செல்வந்தராவதனைத் தடுப்பதற்கென சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்துவதற்கான பயனுள்ள முறைமையொன்றை அறிமுகப்படுத்துதல்

(ஐ) இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுப்பதில் முகவராண்மைகளுக்கிடையிலான ஒத்துழைப்பையும் சர்வதேச உடனுழைப்பையும் ஊக்குவித்தல் அத்துடன்

(ஒ) இலங்கையானது திறத்தவரொருவராகவுள்ள ஊழலுக்கெதிரான ஐக்கிய நாடுகள் சபைச் சமவாயத்தின்கீழும் ஊழல் தடுப்புத் தொடர்பான வேறேதேனும் சர்வதேசச் சமவாயத்தின்கீழுமான கடப்பாடுகளுக்குப் பயன் கொடுத்தலும் இலங்கையில் நேர்மைக் கலாசாரத்தை நிலைநாட்டுவதற்கென சர்வதேச நியமங்களையும் மிகச்சிறந்த செயல்முறைகளையும் ஏற்றங்கீகரித்தலும். இச்சட்டத்தின் குறிக்கோள்கள் ஆகும்.

### ஊழலுக்கெதிரான சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான சுயாதீன ஆணைக்குழுவைத் ஸ்தாபித்தல்

இச் சட்டத்தின் பாகம் I அத்தியாயம் I இல் இலஞ்சம் அல்லது ஊழலுக்கெதிரான சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான சுயாதீன ஆணைக்குழுவைத் ஸ்தாபித்தல் ஆகும். அதில் ஆணைக் குழுவின் அமைப்பு, அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டவர்களான மூன்று உறுப்பினர்களை ஆணைக் குழுவானது கொண்டிருத்தல் வேண்டும். ஆணைக்குழுவின் உறுப்பினர்களுள் ஒருவர், ஆணைக்குழுவின் தவிசாளராகவிருப்பதற்கு அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது ஜனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும். ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுமுன்னர் ஊதியம்பெறும் வேறெல்லாப் பதவிகளையும் கைதுறந்தவராக இருத்தல் வேண்டும்.

ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக இருக்கையில் ஏதேனும் தொழிலைக் கொண்டுநடாத்துதலாகாது அல்லது ஏதேனும் உயர் தொழிலைப் பின்தொடருதலாகாது. ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக இருப்பதிலிருந்தான தகைமையீனங்கள், ஆணைக்குழுவின் உறுப்பினரொருவரைப் பதவியிலிருந்து அகற்றுதல், ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர் பதவிவிலகுதல், ஆணைக்குழு உறுப்பினர்களின் பதவிக்காலம், ஆணைக்குழு உறுப்பினர்களின் ஊதியம், ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் ஏதேனும் அக்கறையை வெளிப்படுத்துதல், ஆணைக்குழு பாராளுமன்றத்துக்கு வகைகூற வேண்டியதாகும், ஆணைக்குழுவின் பொறுப்புடைமைகள் போன்ற விடயங்கள் விபரிக்கப்பட்டுள்ளன.

### ஆணைக்குழுவுக்கான பணிப்பாளர் தலைமையதிபதி மற்றும் பணியாட்தொகுதியினர்

இச் சட்டத்தின் பாகம் I அத்தியாயம் II ல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி மற்றும் பணியாட்தொகுதியினர் பற்றியது.

ஜனாதிபதி, அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது பணிப்பாளர் தலைமையதிபதியொருவரை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் கலந்தாலோசனையின் பின்னர் இச்சட்டத்தின்கீழ் அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும், கடமைகளைப் புரிவதற்கும், பணிகளை நிறைவேற்றுவதற்கும் என ஆணைக்குழுவுக்கு நியமித்தல் வேண்டும். இப் பகுதியில் பணிப்பாளர் தலைமையதிபதியாக நியமிக்கப்படுவதற்கான தகைமைகளும் தகைமையீனங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. பணிப்பாளர் தலைமையதிபதியின் தத்துவங்களும் பணிகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

மேலும் பணிப்பாளர் தலைமையதிபதி பதவியிலிருந்து விலகுதல், பணிப்பாளர் தலைமையதிபதியை பதவி அகற்றுதல், பணிப்பாளர் தலைமையதிபதியின் இறப்பு, பதவி விலகுகை அல்லது பதவி அகற்றுகை, பணிப்பாளர் தலைமையதிபதியின் பதவிக்காலம், பணிப்பாளர் தலைமையதிபதிக்கான ஊதியம், பணிப்பாளர் தலைமையதிபதி தத்துவங்கள் கையளிப்பு, ஆணைக்குழுவின் அலுவலர்களும் ஊழியர்களும், ஆணைக்குழு வேறு ஆளணியினரின் சேவைகளைப் பெற்றுக் கொள்ளுதல், கடமைகளை ஏற்குமுன்னர் வெளிப்படுத்துகை கையொப்பமிடப்படுதல், ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் முதலியவர்கள் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் போன்றவை சட்டப்பிரிவுகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட ஏதேனும் அறிக்கை தொடர்பில் ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினருக்கெதிராக அல்லது அத்தகைய அறிக்கையின் பொருளளவில் உண்மையான விபரம் வேறெவரேனும் ஆளினால் வெளியிடப்படுகின்றமை தொடர்பில் அத்தகைய வேறெவரேனும் ஆளுக்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தில் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் எவையும் தொடுக்கப்படுதலாகாது.

### ஆணைக்குழுவுக்கான நிதி

இச் சட்டத்தின் பாகம் I அத்தியாயம் III ஆனது நிதி சம்பந்தமானது. ஆணைக்குழுவானது, நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினால் குறித்துரைக்கப்பட்டவாறான காலப்பகுதியினுள் ஆணைக்குழுவின் வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல் வேண்டும்.

சொல்லப்பட்ட மதிப்பீடுகள், நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட சொல்லப்பட்ட அமைச்சருடனும் ஆணைக்குழுவுடனுமான கலந்தாலோசனையின்பின்னர் சபாநாயகரினால் முடிவுசெய்யப்படக்கூடியவாறான அத்தகைய திகதியன்று சபாநாயகருக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். சபாநாயகர் சொல்லப்பட்ட மதிப்பீடுகளை, நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அவதானிப்புகளுடன் பாராளுமன்றத்தின் பரிசீலனைக்காக அதன்முன்னர் இடுதல் வேண்டும்

அத்தகைய வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகள் சபாநாயகரிடமிருந்து அவரினால் பெறப்பட்டதிலிருந்து பத்து வேலைநாட்களினுள் அமைச்சர் தனது அவதானிப்புக்களைச் சபாநாயகருக்கு வழங்குதல் வேண்டும். பாராளுமன்றமானது, ஆணைக்குழுவின் வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைப் பரிசீலனைசெய்தபின்னர், பாராளுமன்றம் தகுதியானதெனக் கருதுகின்றவாறாக, அத்தகைய திரிபுகள் எவையேனுமிருப்பின் அவற்றுடன், தேசிய வரவுசெலவுத்திட்டத்தில் சேர்க்கப்படுவதற்காக நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சருக்கு மதிப்பீடுகளை அனுப்பிவைத்தல் வேண்டும்.

### ஆணைக்குழு நிதியம்

ஆணைக்குழு அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

### ஆணைக்குழுவின் தத்துவங்களும் பணிகளும்

இச் சட்டத்தின் பாகம் I அத்தியாயம் IV இல் ஆணைக்குழுவின் தத்துவங்களும் பணிகளும் விவரிக்கப்பட்டுள்ளன. அதில் ஆணைக்குழுவின் அலுவலர்கள் முதலியவர்களை நியமித்தல், பதவியுயர்த்துதல் முதலியன, சொத்துக்களினதும் பொறுப்புகளினதும் வெளிப்படுத்துகைகள் மீதான மத்திய அதிகாரியின் தத்துவம், சர்வதேசச் சமவாயங்கள், உடன்படிக்கைகள், கடப்பாடுகள் முதலியவற்றை நடைமுறைப்படுத்துதல், ஊழல் நடத்தை பற்றி ஆணைக்குழு பொதுமக்களின் விழிப்புணர்ச்சியை அதிகரித்தல்,

ஊழல் எதிர்ப்புக் கொள்கைகளின் நடைமுறைப்படுத்துகையைக் கண்காணித்தல், ஊழற் செயல்களைக் கண்டு பிடிப்பதற்குச் சட்டங்கள் முதலியவற்றைப் பரிசோதனை செய்தல், பகிரங்கக் குழுக்களுக்கு மதியுரையளித்தலும் உதவி வழங்குதலும் ஊழலை மிகக்குறைவாக்குவதற்குச் சட்டவாக்கச் சீர்திருத்தங்களுக்கான விதப்புரைகளை அரசாங்கத்துக்கு வழங்குதல் முதலியன,

ஊழலைத் தடுப்பதற்கான வழிமுறைகளும் அதன் பணிகளின் முறையான நிறைவேற்றுகை முதலியனவும் பூர்வாங்க விசாரணையும், புலனாய்வும், வேறு வழிமுறைகளும், தவறுகள் பற்றிய முறைப்பாடுகள், முன்னேற்றத்தை முறைப்பாட்டாளர் அறிந்து கொள்ளல்,

ஆணைக்குழுவானது பிரிவு 41 இல் குறிப்பீடு செய்யப்பட்ட தவறொன்று புரியப்பட்டுள்ளதெனச் சந்தேகிப்பதற்கான நியாயமானவோர் ஏது உள்ளதென்றும் அத்தவறு புரியப்பட்டமைபற்றிய சான்று எவையேனும் உள்ளனவாவென தேடுதலும் கைப்பற்றுதலும்.

பிடியாணைப் பத்திரங்களை வழங்குதல் பிடியாணையின்றி ஆட்களைக் கைதுசெய்தல் முதலியன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலாலியிலிருந்து...

யது.

யாழ்ப்பாணத்தில் கடந்த சில தினங்களாகவே மோசமான காலநிலை நிலவி வருகின்றது. தொடர் மழை காரணமாக வடக்கின் பல பகுதிகள் வெள்ளநீரில் மூழ்கின.

இந்நிலையில், நேற்றுக் காலை சென்னையில் இருந்து புறப்பட்டுவந்த பயணிகள் விமானம் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்க முடியாத நிலையில் மீண்டும் சென்னை விமான நிலையத்திற்கு திரும்பியது. (ம-7,33)

## வலம்புரி...

ஆசிச் செய்தியில்,

மக்களை நேசிக்கின்ற மனம் நிறைந்த பத்திரிகையாக வலம்புரிப் பத்திரிகை விளங்குகிறது. கடந்த இருபது நான்கு ஆண்டுகளாக வடக்கில் இருந்து வெளிவரும் உன்னத பத்திரிகையாக இப் பத்திரிகை விளங்குகிறது.

எதற்கும் அஞ்சாமல் நீதியை எடுத்துரைக்கிறது. ஆசிரியர் கருத்து எம் மண்ணில் மட்டுமல்ல புலம்பெயர் சமூகத்திலும் தனித்துவமாக பேசப்படுகிறது. கடந்த இருபத்தினான்கு ஆண்டுகள் போருக்கு மத்தியிலும், பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு மத்தியிலும் வலம்புரி தன்பணி தொடர்வது பெருமைக்குரியது.

வலம்புரியின் வளர்ச்சிப் பாதையில் பத்திரிகை நிர்வாகிகளின் கூட்டு முயற்சி பர்ணமிக்கிறது. இறையாசியும் ஆத்மீகப் பெரியவர்களின் ஆசியும் சான்றோர்களின் நல்லாசியும் மக்களின் மகத்தான ஆசியும் வலம்புரியை வளர்த்தெடுத்துள்ளது.

வலம்புரி வெள்ளிவிழாவை சந்திக்க இருக்கும் வேளையில், அழகான சொந்தக் கட்டடத்தில் வலம்புரி வெளிவந்த கொண்டிருப்பது பெருமைக்குரியது.

சைவ சமயத்தவர்களின் அடிப்படைப் பிரச்சினைகளை இன்று நீதியோடு எடுத்துரைக்கும் பத்திரிகையாக வலம்புரி நிமிர்ந்து நிற்கிறது.

எல்லா மதத்தவர்களையும் மதிக்கும் வலம்புரி சமூகப் பிரச்சினைகளை இனங்கண்டு ஆலடிச் சம்பாசனை ஊடாக அனைவரும் அறிய வைக்கிறது. பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் அவர்கள் வலம்புரியின் புதிய கட்டடத் திறப்புவிழாவின்போது தெளிவான உரையொன்றினை ஆற்றினார்.

யாருக்கும் தீமை எண்ணாது எந்த வஞ்சனை சூதும் இல்லாது வலம்புரி எவ்வாறு வளர்ச்சி பெற்றது என் பதனைத் தத்ரூபமாக எடுத்துரைத்தார். நான்காம் மாடிவரை சென்று வலம்புரியை நோக்கி வந்த ஆபத்துக்களை எல்லாம் கடந்து தாம் எப்படி பயணிக்கின்றோம் என்று கூறிய வார்த்தைகள் ஆச்சரியத்தை தந்தன.

என்றும் வலம்புரி சத்திய வழியில் நின்று சிறப்பாகச் செயற்பட துர்க்கை அம்பாளைப் பிரார்த்திக்கிறேன்.

கற்றோர் மத்தியில் வலம்புரி பற்றிய அபிப்பிராயம் இன்று உயர்ந்து நிற்கிறது. அத்தகைய நன்மதிப்புகள் மேலும் வலம்புரியின் வளர்ச்சிக்கு உதவும் என்பதில் ஐயமில்லை.

வலம்புரிப் பத்திரிகை நிர்வாகிகள் சி.வெற்றிவேலாயுதம், க.திருமாலழகன், ந.விஜயசுந்தரம் ஆகியோருக்கும் பணியாளர்களுக்கும் வாசகர்களுக்கும் இதயபூர்வமான வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்து அமைகிறேன் என தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவரும் சிவபூமி அறக்கட்டளைத் தலைவருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் வழங்கிய ஆசிச் செய்தியில் குறப்பிட்டுள்ளார்.(ம)

## யாழில் டெங்கு...

கழக வளாகங்கள், பல்கலைக்கழக விடுதிகள், அனைத்திலும் நாளை 21ஆம் திகதி முழுநேர டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது என யாழ். மாவட்ட அரச அதிபர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் வெளியிட்ட செய்திக் குறிப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோய்த்தாக்கம் மிக உச்ச நிலையை அடைந்துள்ளது. இன்றைய தினத்தில் (நேற்று) மட்டும் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்ட 111 டெங்கு நோயாளிகள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, பருத்தித்துறை, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலைகள் மற்றும் தனியார் வைத்தியசாலைகளிலும் அனுமதிக்கப்பட்டிருப்பதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் யாழ் மாவட்டத்தில் இம்மாதம் 18ஆம் திகதி வரை 886 டெங்கு நோயாளர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு பிரிவின் பூச்சியியல் ஆய்வுக்குழுவினர் யாழ்.மாவட்டத்தில் கடந்த 3 நாட்களாக மேற்கொண்ட ஆய்வின் பிரகாரம் யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுகளில் மிக அதிகமான டெங்கு பரவல் இருப்பதாகவும் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்கள் பெருகிக் காணப்படுவதாகவும் அடையாளம் கண்டுள்ளனர்.

குறிப்பாக வைத்தியசாலை வளாகங்கள், பாடசாலை வளாகங்கள், பல்கலைக்கழக வளாகங்கள், பல்கலைக்கழக விடுதிகள், அரசாங்க அலுவலகங்கள், அரசாங்க விடுதிகள், தனியார் கல்வி நிறுவன வளாகங்கள் போன்றவற்றில் டெங்கு தாக்கத்தை ஏற்படுத்தும் நுளம்புக் குடம்பிகள் பெருமளவில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுகளில் காணப்படும் இந்நிலைமை ஏனைய பிரதேசங்களிற்கும் வியாபித்து யாழ் மாவட்டம் முழுவதும் டெங்கு தாக்கம் ஏறத்தாழ அபாயகரமான நிலைமையை எட்டியுள்ளது.

எனவே யாழ். மாவட்டத்தில் பின்வரும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது

01) சகல பாடசாலை வளாகங்கள், வைத்தியசாலை வளாகங்கள், அரச நிறுவனங்கள் அமைந்துள்ள வளவுகள், பல்கலைக்கழக வளாகங்கள், பல்கலைக்கழக விடுதிகள், அனைத்திலும் நாளை 21ம் திகதி முழுநேர டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற் கமைய மேற் குறித்த அனைத்து வளாகங்களிலும் அங்கு கடமையாற்றுவோர் மற்றும் தங்கியிருப்போர் சிரமதானம் மூலம் நீர் தேங்கி நிற்கக் கூடிய இடங்கள் மற்றும் கொள்கலன்களை அகற்றி அப்புறப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபடவேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். வளாகங்களின் அளவினைப் பொறுத்து இச் சிரமதான நடவடிக்கையானது தொடர்ந்து 22ஆந் திகதியும் மேற்கொள்ள வேண்டியிருப்பின் தவறாது குறித்த சிரமதானம் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

02) மேலும் பொதுமக்கள் தங்கள் வீடு வளவுகளில் நீர் தேங்கி நிற்கக் கூடிய சகல கொள்கலன்களை அகற்றி டெங்கு நுளம்பிலிருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்படி விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு அனைத்து அரசாங்க நிறுவனங்களும் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழக நிர்வாகங்களும் ஒத்துழைப்பு வழங்கிச் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் என்றுள்ளது. (ம-7,33)

லக்கி 7 VIP
திகதி 2023.12.19
சீட்டிழுப்பு இலக்கம் 0159
A 7 2 8 5 0 5 A

தன நிதானய
திகதி - 2023.12.19
சீட்டிழுப்பு இலக்கம் - 1363
Q 03 20 34 77 Q
07942

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3575
சீட்டிழுப்பு திகதி 19.12.2023
Q 38 59 62 71
Q 67322

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.12.19
சீட்டிழுப்பு இலக்கம் 0642
கடகம் 37 45 51 62 கடகம்
28673 20

மஹஜன சம்பத
திகதி 2023/12/19
சீட்டிழுப்பு இலக்கம் 5333
J 9 2 6 7 7 5

மெகா பவர்
திகதி 19/12/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1681
A 21 43 55 69 77
55708

உத்தியோகபூர்வ முடிவுகள்
19.12.2023 வெற்றி வாரம் 041 வர்ணம் சிவப்ப
O 4 9 4 0 9 9
70078
24,298,243.20
DLB Web : www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2307 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.12.19 தினம் செவ்வாய்க்கிழமை
19 20 24 76 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு. 62,301,644/-
49694

சனிதா
திகதி 2023.12.19 வெற்றி வாரம் 4468 வர்ணம் பச்சை
14 29 59 72 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு.67,341,236.00
53732

சசிரி
வெற்றி வாரம் 417
2023.12.19
வெற்றி இலக்கங்கள் 07 26 33
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,938,080/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4019 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.12.19 தினம் செவ்வாய்க்கிழமை
25 27 58 61
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 7,448,470.80
310308

ஜய
H 02 21 36 45 66
1483
2023.12.19 சவ்வாய்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 479,561,244.20

அட கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2133
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.77,267,338.40
சீட்டிழுப்பு திகதி : 2023.12.19
32 36 60 73 K
100324

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



## கந்தையா மகாதேவா பத்தர்

கொக்குவில் மேற்கு மணியர்பதியைப் பிறப்பிடமாகவும் சொர்ணவடலி, கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மகாதேவா பத்தர் அவர்கள் 18.12.2023 திங்கட்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - கமலம்மா தம்பதிகளின் புதல்வனும் லீலாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற துரைச்சாமி - மகாலட்சுமி தம்பதியரின் மருமகனும் மற்றும் காலஞ்சென்ற மகேஸ்வரி, மங்கையற்கரசி, மனோன்மணி, மாசிலாமணி, மாணிக்கவாசகர், மகிழரத்தினம், மகேஸ்வரன் ஆகியோரின் சகோதரனும் மற்றும் குமுதினி (கனடா), புலேந்திரன் (நெதர்லாந்து), ரவீந்திரன் (கனடா), செல்வேந்திரன், சாந்தினி, ஞானேந்திரன் (கிராம அலுவலர், கோப்பாய் பிரதேச செயலகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தனபாலன், ஜெயராணி, கல்ப்பனா, தர்மபாலா (சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் - யாழ்.மாவட்டம்), துஸாந்தி (ஆசிரியை - யாழ்/இணுவில் மத்திய கல்லூரி) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.12.2023) வியாழக்கிழமை பூநாறி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காலை 11.30 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பூநாறி வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

*தகவல் :* மனைவி, பிள்ளைகள்
தொ.பே : 077 977 3733,
071 641 4836

(C-7951)

## யாழில் 3 நாட்...

போதைப்பொருள் பாவனை அதிகமாக காணப்படுவதாக இனம் காணப்பட்ட பிரதேசங்களில் விசேட நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

அதன் போது, போதைப்பொருள் பாவனையாளர்கள், போதைப்பொருட்களை உடைமையில் வைத்திருந்தார்கள் எனும் குற்றச்சாட்டில், யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலுமாக 70 பேர் வரையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை தத்தம் பிரிவுக்கு உட்பட்ட சட்டவைத்திய அதிகாரி முன் முன்னிலைப்படுத்தி மருத்துவ பரிசோதனைக்கு பொலிஸார் உட்படுத்தியுள்ளனர்.

மருத்துவ பரிசோதனை அறிக்கைகள் கிடைக்கப்பெற்ற பின்னர், தமது பொலிஸ் பிரிவுக்குரிய நீதிமன்றங்களில் அவர்களை முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை எதிர்வரும் நாட்களிலும் இந்த விசேட நடவடிக்கைகள் தொடரும் எனவும், போதைப்பொருள் வியாபாரிகள் சிலரை அடையாளம் கண்டுள்ள நிலையில் அவர்களை கைது செய்வதற்குரிய நடவடிக்கைகளையும் முன்னெடுத்து உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(ம-7.33)


Happy New Year 2024
கனடாவில் உயர்கல்வி
குறைந்த கட்டணத்தில்
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி
STUDY IN UK & WORK VISA
ஆங்கில பயிற்சியுடன் கூடிய வெளிநாட்டு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு
நேரடியாக வருகைதந்து இலவச ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள
வெற்றிகரமான 13 வருட சேவையில்
WEC COLLEGE
புதிய உயர்கல்லூரி வளாகம்
ஆரியகுளம்,யாழ்ப்பாணம்
Whatsapp: 0094779265447
0212050988,0217200989
கிளை: சங்கத்தானை,சாவகச்சேரி
(18255)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18242)
076 825 7716 (ஆகாஸ்)

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
•கிளிநொச்சி •சுன்னாகம்
•சாவகச்சேரி •மானிப்பாய்
•நெல்லியடி •பருத்தித்துறை
•திருகோணமலை •வல்வெட்டித்துறை
•கோப்பாய் •புத்தூர்
•பண்டத்தரிப்பு •சங்கானை
•கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-7953)

CANADA
VISITOR VISA
VISITOR VISA வில் கனடா
செல்வதற்குரிய ஆலோசனைகள்
மற்றும் Online விண்ணப்பங்கள்
விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-7953)
0777-068-777
49A.சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS


# மரண அறிவித்தல்



## சிவபாதம் சிவசுதன்

வேலணை மேற்கு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் வீதி கோணாந்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாதம் சிவசுதன் அவர்கள் கடந்த 17.12.2023 (ஞாயிற்றுக்கிழமை) அன்று அகால மரணமானார்.

அன்னார் சிவபாதம் - இளங்கோதை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் தாட்சாயினியின் அன்புக் கணவரும் தஸ்வின், சதுஸ், அர்ச்சயன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரதீபன், பிரியாழினி, பிறையழகன் ஆகியோரின் பாசமிகு பெரிய மாமாவும் பிரீத்தி, பிரணி ஆகியோரின் அன்பு மாமனும் பிரியாழினி, அதிரா ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (21.12.2023) வியாழக்கிழமை பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*தகவல்:*
குடும்பத்தினர்

(C-7953)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 121, [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.